# ஸத்திய தரிசனம்.

## மஹாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

4-ம் பிரிவு 10-வது அத்தியாயம்.

மஹாத்மா காந்தி நவஜீவன் பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவரும் தமது வரலாறு பின்வருமாறு:—

என்னுடைய வாழ்வில் நேர்ந்த பல சம்பவங்கள் ஒன்று சேர்ந்து பல ஜாதியினரையும், பல மதஸ்தர்களையும் சேர்ந்த பலருடனும் எனக்கு நெருங்கிய சம்பந்தமேற்படும்படி செய்துவிட்டன. அவர்களுடன் நான் நெருங்கிப் பழகியதிலிருந்து எனது பந்துக்களுக்கும் அந்நியர்களுக்கும், சொந்த தேசத்தினருக்கும் அந்நிய தேசத்தினருக்கும், வெள்ளை ஜாதியினருக்கும் கருப்பு ஜாதியினருக்கும், ஹிந்துக்களுக்கும் இந்தியர்களாகிய மற்ற மதஸ்தர்களுக்கும் நான் எவ்வித வித்தியாசமும் பாராட்டியதில்லையென்று எனது அநுபவத்தைக் கொண்டு சொல்ல வேண்டியிருக்கிறது. என்னுடைய இருதயமானது அவர்களுக்குள் எவ்வித வித்தியாசமும் பாராட்ட இடங்கொடுக்கவில்லை. இந்தக் குணம் எனக்கு சுபாவமாகவே ஏற்பட்டிருந்ததாலும், இந்தக் குணம் எனக்கு ஏற்படும்படி செய்துகொள்ள நான் எவ்வித முயற்சியும் செய்யாததாலும், இதை என்னிடத்திலுள்ள பெரிய விசேஷமென்று நான் சொல்லிக்கொள்ள முடியாது. ஆனால் அஹிம்சை, பிரம்மச்சரியம், அபரிக்கிரகம் முதலிய சன்மார்க்க நெறிகளை ஸ்வீகரித்துக்கொள்ள நான் வெகுவாக சிரமப்பட்டிருக்கிறேன்.

நான் டர்பானில் பாரிஸ்டர்தொழில் செய்துகொண்டிருந்தபோது என்னுடைய ஆபீஸ் குமஸ்தாக்கள் என்னுடனேயே தங்கியிருந்தனர். அவர்களில் கிறிஸ்தவர்களும் ஹிந்துக்களுமிருந்தார்கள்; மாகாண வாரியாகச் சொல்லுவதெனில் குஜராத்திகளும் தமிழர்களும் இருந்தார்கள். அவர்கள் எனது சொந்த பந்துக்களைத் தவிர வேறு என்று நான் எக்காலத்திலும் நினைத்ததில்லை. அவர்களனைவரையும் எனது சொந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களைப் போலவே நான் நடத்தி வந்தேன். அதற்கு எனது மனைவி தகராறு செய்த காலங்களில் அவளுடன் நான் மனஸ்தாபப்பட்டிருக்கிறேன். அவர்களில் ஒருவர் பஞ்சமர்களுக்குப் பிறந்த கிறிஸ்தவர்.

மேனாட்டுப்பாணியில் நான் வசித்த வீடு கட்டப்பட்டிருந்தது. சாக்கடைத் தண்ணீரை வெளியில் விடக்கூடாதாதலால் அந்த வீட்டுக்குச் சாக்கடையில்லை. ஒவ்வொரு அறையிலும் மூத்திரப் பாண்டங்கள் இருந்தன. வேலைக்காரரைக்கொண்டு சுத்தம் செய்வதற்குப் பதிலாக நானாவது அல்லது என்னுடைய மனைவியாவது அவைகளைச் சுத்தம் செய்துவந்தோம். சொந்த வீட்டிலிருப்பது போல என்னுடைய வீட்டில் வசித்து வந்த என்னுடைய குமஸ்தாக்கள் அவரவர்களுடைய அறையிலுள்ள மூத்திரப் பாண்டங்களைச் சுத்தம் செய்துவந்தார்கள். கிறிஸ்தவ குமஸ்தா புதிதாக வந்தவர். ஆகையால் அவருடைய படுக்கை அறையைச் சுத்தம் செய்ய வேண்டியது எங்களுடைய கடமையாக இருந்தது. என்னுடைய மனைவி மற்றவர்களுடைய அறைகளிலுள்ள பாண்டங்களைச் சுத்தம் செய்து வந்தாள். ஆனால் பஞ்சமராக இருந்த ஒருவருடைய அறையிலுள்ள பாண்டங்களைச் சுத்தம் செய்ய அவளுக்கு மனம் வரவில்லை. ஆகையால் எங்களிருவருக்குள்ளும் மனஸ்தாபம் ஏற்பட்டுவிட்டது. அந்தப் பாண்டங்களை நான் சுத்தம் செய்யவும் அவளுக்கு சம்மதப்படவில்லை. அவளும் சுத்தம் செய்ய விரும்பவில்லை. அவளுடைய கண்கள் கோவைப்பழம்போல கோபத்தினால் சிவப்பு வந்து என்னைக் கொடூரமாகப் பார்த்த பார்வை இன்னும் என் அகக்கண்ணைவிட்டகலவில்லை. அந்த அப்பாண்டத்துடன் அவள் ஏணி வழியாகக் கீழே இறங்குகையில் அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வடிந்துகொண்டிருக்கும். ஆனால் நான் அன்புடன் கடுமையான சுபாவமுள்ள கணவன். நான் அவளுக்கு குருவென நினைத்துக்கொண்டேன்; ஆகையால் அவளிடத்திலுள்ள அன்பினால் அவளை இம்சித்து வந்தேன்.

அந்தப் பாண்டத்தை அவள் நிர்ப்பந்தத்தினால் எடுத்துக் கொண்டுபோய்க் கொட்டுவதில் எனக்குத் திருப்தி ஏற்படவில்லை. சந்தோஷமாக அவள் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்பது எனது விருப்பம். ஆகவே இவ்விதம் செய்வதை நான் என்னுடைய வீட்டில் சகித்துக்கொண்டிருக்க முடியாது என்று உரத்த குரலில் சொன்னேன்.

அந்த வார்த்தைகள் அம்புபோல் அவளுடைய இருதயத்தில் பாய்ந்தன. "உங்களுடைய வீட்டு வேலையை நீங்களே செய்துகொண்டு என்னை வெளியே அனுப்பிவிடுங்கள்" என்று அவள் சொன்னாள். எனக்கு என் நிலையே போய்விட்டது. என் மனதிலுள்ள கருணைக் குணமும் மறைந்து போய்விட்டது. அவள் கையைப் பிடித்து, எனக்கு எதிராக விருந்த வாயிற்படிக்கு நிர்க்கதியாக இருந்த அவளை இழுத்துப்போய், வெளியே தள்ளிவிடுவதற்காகக் கதவைத் திறந்தேன். அவளுடைய கண்களில் கண்ணீர் தாரை தாரையாக வடிந்துகொண்டிருந்தது. "உங்களுக்கு வெட்கமில்லையா? சுய அறிவே உங்களுக்கு இல்லாமற் போய்விட்டதா? நான் எங்கே போவது? நான் போவதற்கு எனது பெற்றோர்களாவது, பந்துக்களாவது இங்கு இல்லையே? நான் உங்களுடைய மனைவியாதலால் நீங்கள் கொடுக்கும் அடிகளையும் உதைகளையும் நான் சகித்துக்கொண்டிருக்க வேண்டுமென்று நீங்கள் நினைத்திருப்பதாகத் தோன்றுகிறது. ஆண்டவன் கருணையால் உங்களுக்கு நல்ல புத்தி உண்டாகட்டும். கதவை மூடுங்கள். நமது வீட்டில் இவ்விதம் நடப்பதை தெருவிலுள்ளவர்கள் பார்த்துச் சிரிக்க வேண்டாம்" என்று சொன்னாள்.

வெளிக்கு நான் பின் வாங்காதவன் போல் காட்டிக்கொண்ட போதிலும் நான் வெட்கமடைந்து கதவை மூடிவிட்டேன். என்னுடைய மனைவி என்னைவிட்டு எவ்விதம் பிரியமுடியாதோ அவ்விதமே நானும் அவளைவிட்டுப் பிரிவதற்கில்லை. எனக்கும் அவளுக்கும் அடிக்கடி சச்சரவு ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் முடிவில் நாங்கள் ராசியாகப்போயிருக்கிறோம். என்னுடைய மனைவி எல்லையற்ற பொறுமைக்குணமுடையவளாகவிருந்ததால் எப்பொழுதும் வெற்றி அவளுடையதே. அந்தக்காலத்தில் நான் இருந்துவந்த நிலைமையிலிருந்து நான் வெளிப்பட்டுவிட்டதால் இப்பொழுது இச்சம்பவ விவரத்தை அப்படியே சொல்லுவது சாத்தியமாயிருக்கிறது. நான் முன்போல் குருட்டுத்தனமாக நான் சொல்வதையெல்லாம் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கும் கணவனாக இப்பொழுது இருக்கவில்லை. நான் இப்பொழுது எனது மனைவியின் குருவாகவுமிருக்கவில்லை. நான் ஆதியில் எவ்வளவு அவளை உபத்திரவப்படுத்தினேனோ அவ்வளவு அவள் இப்பொழுது எனக்கு உபத்திரவம் செய்யலாம். நாங்கள் அதிகம் பழகிய சிநேகிதர்களாகிவிட்டோம். வாலப்பருவத்திலிருந்ததுபோல் ஆசைகளின் பலனாக இப்பொழுது நாங்கள் கட்டுண்டிருக்கவில்லை. நான் பிணியாய்ப்பட்டிருந்த சமயங்களில் எவ்வித சன்மானத்தையும் எதிர்பாராமல் அவள் எனக்கு சிசுருஷை செய்துவந்திருக்கிறாள்.

பிரம்மச்சரியத்தைப்பற்றி நான் ஒன்றும் தெரிந்துகொண்டிராத 1898-ம் வருஷத்தில் அந்த சம்பவம் நடந்தது. அந்தக் காலத்தில் புருஷன் சொற்படி மனைவி நடந்துகொள்ள வேண்டுமென்றும், கணவனுடைய கட்டளைகளை நிறைவேற்றி வைப்பதற்கே மனைவிகள் ஏற்பட்டிருப்பதாகவும் நான் நினைத்திருந்தேன். மனைவியானவள் புருஷனுடைய சுக துக்கங்களைப் பங்காகத் தாங்கிக்கொள்ளும் பாகஸ்தியென்று அப்பொழுது நான் நினைக்கவில்லை.

இந்த ஒரு முக்கியமான சம்பவத்தை நான் சொல்லுவதிலிருந்து எங்களைப் போல் தம்பதிகள் இருப்பது அரிதென்று, எங்களுடைய லக்ஷியம் ஒன்றாக இருக்கிறதென்றும் எவரும் நினைத்து விடவேண்டாம். என் வாழ்வின் லக்ஷியங்கள் தனக்கு ஏதேனும் இருக்கிறதாவென்பது எனது மனைவிக்கே தெரியாது. இன்னும் நான் செய்யும் பல காரியங்கள் அவளுக்குச் சம்மதமில்லாதவைகளாக இருக்கலாம். ஆனால் அவைகளைப்பற்றி நாங்கள் விவாதிப்பதில்லை; அவைகளைப்பற்றி விவாதிப்பதில் நன்மை இருக்கின்றதென்றும் நான் நினைக்கவில்லை. ஏனெனில் அவளுடைய பெற்றோர்களாவது நானாவது காலாகாலத்தில் அவர்களுக்குக் கல்வி போதிக்கவில்லை. ஆனால் ஹிந்து ஸ்திரீகளில் பெரும்பாலோருக்கு இருந்துவரும் ஒரு முக்கிய குணம் அவளுக்குப் பூரணமாக இருக்கிறது. அதாவது, மனப்பூர்வமாகவோ அரை மனதுடனோ, தெரிந்தோ தெரியாமலோ என்னுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும் பாக்கியம் தனக்குக் கிடைத்ததில் அவள் சந்தோஷமடைந்து, நான் அடக்கமான வாழ்வை நடத்த விரும்புவதற்கு எவ்வித இடையூறும் செய்யாமலிருந்து வந்திருக்கிறாள். ஆகவே கல்வித் துறையில் எங்களுக்குள் விசேஷ வித்தியாசமிருந்தபோதிலும் நாங்கள் சந்துஷ்டியாகவும், சந்தோஷமுமாகவும், அபிவிருத்தி வழியிலும், நடந்துகொண்டு வந்திருக்கிறோமென்ற உணர்ச்சி எனக்கு எப்பொழுதும் இருந்து வந்திருக்கிறது.

# வெப்ப ஊற்று.

பம்பாயைச் சேர்ந்த பன்சாடா வென்னுமிடத்திற்குச் சுமார் பத்து மைல்களுக்கு அப்பாலுள்ள வைனா என்னுமிடத்தில் ஆச்சரியமான நீர் ஊற்றொன்றிருக்கின்றது. அவ்விடம் பி.பி.ஸி.ஐ. ஸ்டேஷனிலிருந்து பஸியனை ரயில் பாதை மார்க்கமாக ஒன்றரைமணி நேரம் பிரயாண தூரத்திலிருக்கின்றது. நீர் ஊற்றுக்கும் ரயில்வே ஸ்டேஷனுக்கும் ஐந்து நிமிஷ நடை தூரந்தானிருக்கும். அந்நீர் ஊற்றின் தண்ணீர் கொதிப்பதனால் அதில் யாரும் ஸ்நானம்செய்யமுடியாது. ஆயினும் அந்நீரில் ஏராளமான கந்தகச் சத்து கலந்திருப்பதினால் அது சர்ம வியாதிகளுள்ளவர்களுக்குப் பெருத்த நன்மையளிக்கக்கூடியது. அந்நீர் பட்டாலே எவ்விதமான சர்ம வியாதியும் பஞ்சாய்ப் பறந்துவிடும். இவ்வூற்று நீரில் ஒரு முக்கிய மர்மமிருக்கின்றது. வருடத்தில் மூன்று நாட்களுக்கு இவ்வூற்று நீர் திடீரென்று குளிர்ந்து ஜனங்கள் தாராளமாக ஸ்நானம் செய்வதற்குச் சௌகரியமாகின்றது. இம்மூன்று நாட்களும் சைத்திர சுத்த பௌர்ணமியன்றும் அதற்கு ஒரு நாள் முன்னும் பின்னும் தான். இம்மூன்று நாட்களும் எப்போதும் ஈஸ்டர் விடுமுறையின் போது தான் வருகின்றன. இந்நாட்களில் லட்சக்கணக்கான இந்து யாத்ரீகர்கள் அந்நீர் ஊற்றுக்கு வந்து ஸ்நானம் செய்து போகின்றனர். அதன் பிறகு ஊற்று நீர் மறுபடியும் பொறுக்கக்கூடாத உஷ்ணமுடையதாகி விடுகின்றது. இம்மூன்று நாட்கள் தவிர வருட முழுதும் ஊற்று நீர் கொதித்துக்கொண்டு தானிருக்கின்றது. இவ்வெந்நீர் ஊற்றுக்கும் ராமர் சீதை முதலானவர்களுக்கும் சம்பந்தமுண்டென்று பண்டைக் காலமுதல் சொல்லப்பட்டுவருகின்றது. இவ்வூற்றின் மர்மத்தை இதுவரையிலும் எவராலும் கண்டறிய முடியவில்லை.

# இருதய வேகம்.

உடல் பெரிதாக ஆக, இருதய அடிப்பின் வேகம் குறைகிறதாம். யானையின் இருதயம் நிமிஷத்துக்கு 25 முறை அடிக்கிறதாம். கழுதையின் இருதயம் 50 முறை அடித்துக்கொள்ளுமாம். மனிதனுடைய இருதயம் சராசரி 70 முறையும், ஸ்திரீக்கு 80 முறையும், இளைஞனின் இருதயம் 90 முறையும், சிசுவின் இருதயம் 140 முறையும், குழி முயலின் இருதயம் 150 முறையும், சுண்டெலியின் இருதயம் 175 முறையும் அடித்துக்கொள்ளுமாம்.

# அரசர் பிரயாணம்.

## முற்கால தற்கால செலவுகள்.

ரினௌன், கப்பலில் ஆஸ்திரேலியா முதலிய தென்னாட்டுப் பிரதேசங்களுக்குப் பிரயாணம் சென்ற யார்க்கு இளவரசரும் பெருமாட்டியும் சீக்கிரத்தில் லண்டனுக்கு வந்து விடுவார்கள். இந்தப் பிரயாணத்துக்கு ஒருக்கால் ஜாஸ்திச்செலவு ஏற்படாதிருக்கலாம். எனினும் இதுபோன்ற மன்னர் பிரயாணங்களுக்கு, முன் எவ்வளவு செலவாக்கப்பட்டதென்று அறிய விரும்புவது அநாவசியமாகாது.

யார்க்கு இளவரசர் பிரயாணத்துக்கு எவ்வளவு செலவாயிருக்கிறதென்று இப்பொழுது திட்டமாகத் தெரியாது. ஜார்ஜ் சக்கிரவர்த்தியும், சக்ரவர்த்தினியும் முடி சூட்டப்படுவதற்கு முன், ஓபீர், கப்பலில் உலகப் பிரயாணம் செய்த பொழுது ஒரு லட்சம் பவுன் செலவாயிற்று. அரசர் பிரயாணத்துக்கு அதைவிடப் பெரிய தொகை முன் ஒருபொழுதும் செலவானதில்லை.

டெல்லி தர்பார் பிரயாணத்துக்கு சக்ரவர்த்திக்கு 80000 பவுன் செலவாயிற்று. ஆனால் அது விசேஷ சந்தர்ப்பம் ஆனதினால் அந்தப்பிரயாணத்துக்கு ஆடம்பரச் செலவு அவசியம் தான். அப்படிச்செலவு செய்யப்படாவிட்டால் 3000 கினி விலையுள்ள மோட்டார் கார்களை டஜன் கணக்காய் வாங்கும் இந்திய மன்னர்கள், சக்ரவர்த்தியை மதிக்க மாட்டார்கள்

வேல்ஸ் இளவரசர் கானடாவுக்குச் சென்ற போதும் ரினௌன், கப்பலில் தான் சென்றார். தென் ஆபிரிக்காவுக்குப் போனபோது தனிக்கப்பலில் பிரயாணம் செய்யவில்லை. யூனியன் காசில் என்ற கப்பலில் இளவரசருக்காக ஒரு தனிபகுதி ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் அந்தப்பிரயாணத்துக்குக் கணிசமான ஒரு பெரிய தொகை செலவாயிற்று. இளவரசரின் தென் ஆபிரிக்கா பிரயாணத்துக்கு பார்லிமெண்டார் அளித்த தொகை 13,000 பவுன் தான். தென்னாப்பிரிக்கா சர்க்காருக்கு அந்தப் பிரயாணத்தில் 10,000 பவுன் செலவு ஏற்பட்டது.

ஏழாவது எட்வர்டு சக்ரவர்த்தியும், வேல்ஸ் இளவரசரும் இந்தியாவுக்கு வந்த பொழுது பீக்கன்ஸ்பீல்டு பிரபு 60,000 பவுன் பிரயாணச் செலவுக்குத் தேவையென்று பார்லிமெண்டில கேட்டாராம். ஆனால் பார்லிமெண்டார் அந்தத் தொகையை அதிகமென்று புகார் செய்யாமல் சிறு தொகை தானே கேட்கப்படுகிறது என்று வருத்தப் பட்டார்களாம். அந்தப் பிரயாணத்துக்கு 5லட்சம் பவுன் அநுமதிக்க வேண்டுமென்று பார்லிமெண்டார் எண்ணியிருந்தார்களாம்.

பண்டைக் காலங்களில் அரசர்கள் பிரயாணம் செய்த மாதிரியே வேறு. எட்டாவது ஹென்ரி அரசர் வடநாட்டில் பிரயாணம் செய்தபோது ஒரு பெரிய சேனைக்குத் தலைவராகச் சென்றாராம். அவரது ஐந்தாவது மனைவியும், அரண்மனைச் சிப்பந்திகளும் அரண்மனை உத்தியோகஸ்தர்களும் கூடச் சென்றார்களாம்.

அரசர் தங்குமிடங்களில் பட்டுக் கூடாரம் அடிக்கப்பட்டதாம். அரசர் கூடச் செல்லுபவர்களின் சாப்பாட்டுச் செலவுக்கு அந்தந்த இடங்களிலுள்ள ஜனங்களே தான் ஏற்பாடு செய்யவேண்டுமாம். படையெடுத்துவரும் வெளிநாட்டரசர் பிரயாணம் செய்வது போலவே எட்டாவது ஹென்ரிதன் சொந்த நாட்டில் பிரயாணம் செய்தாராம்.

எடின்பரோ முற்றுகை சமயத்தில் அவர் பாண்டி பிராக்டில் கூடாரமடித்திருக்கும்பொழுது சுற்றுப் பக்கங்களிலுள்ள வயல்களில் அவரது படைகள் பலவந்தமாக அறுவடை செய்து உணவுப் பொருள் சேகரித்தார்களாம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## உலகியல்.

### பிணம் கிடக்கும் வழி சுவாமி செல்வதில்லை!

ஸ்ரீமான் இராமசாமி என்பார் "லோகோபகாரி"யில் படுகொலை எனும் பகுதியில் பின் வருமாறு குறிப்பிடுகிறார்:—

பரம சாதுக்களும், நம்மேல் பூரண நம்பிக்கை கொண்டிருப்பவைகளுமான ஆடு, கோழி, பன்றி முதலான ஜீவராசிகளைக் கொல்வதா? வேண்டாம். பன்றி ஒரு காலத்தில் விஷ்ணு அவதாரம். அதை இம்சித்தால் விஷ்ணுவுக்குக் கோபம் வரும். ஆடு முருகப் பெருமானுக்கு வாகனம்; கோழி அவருக்குக் கொடி. அவைகளைக் கொன்றால் முருகனுக்கு சம்மேமல் கோபம் உண்டாகும். மீன்களைக் கொன்று தின்றால் மச்சாவதாரனுக்குத் தீங்கு செய்ததாகும். வேண்டாம். அநியாயமாய் ஜீவக்கொலைகளால் வாழ்நாள் முற்றும் பாழ்நாளாக முடியும். நாம் போற்றும் தெய்வம் கோபிக்கும். பிணிகள் இடைவிடாது நம்மைச் சுற்றி வாட்டும். சாதாரணமாய் நாம் பெற்ற குழந்தைக்கு ஏதாவது காயம் ஏற்பட்டால் நாம் எவ்வளவு வருந்துகிறோம். அதைப்போல் நம்மையெல்லோரையும் படைத்த லோகமாதாவாகிய பார்வதி தேவிக்குத் தன பிள்ளைகளையே கொண்டுபோய் எதிரில் வெட்டினால் கோபம் வராதா? அல்லது நம்மேல் கருணை வருமா? இதை யோசியுங்கள். சாதாரணமாக மரக்கறி வகைகளில் மாம்சத்தைவிட அதிக சத்து உண்டென்று பல பெரியோர்கள் கூறுகிறார்கள். திருஷ்டாந்தமாக நம்மவர்களில் மாமிசம் அருந்தாத பிராமணர், ஜயினர், சைவர் இவர்களைக் கவனியுங்கள். நம்மைவிட தேக காந்தியும், திடகாத்திரமும், முக வசீகரமும், நுட்பபுத்தியும், கல்வித் தேர்ச்சியும் அடைந்திருக்கிறார்கள். இவற்றிற்கெல்லாம் காரணம் கொல்லாமை; கொன்றதைத் தின்னாமை. இவை இரண்டும் உலகில் ஒருவனுக்கு உண்டானால் எப்பொழுதும் தேக ஆரோக்கியமும் செல்வமும் கிடைத்து சுவர்க்க போகம் அனுபவித்து முடிவில் மோட்சத்தை அடையலாம். பலி கேட்கும் தெய்வமே கிடையாது. தெருவில் பிணம் விழுந்தால் சுவாமி அவ்வீதி போகக்கூடாது என்று சொல்வது ஏன் தெரியுமா? அப்பிணத் தீட்டு சுவாமிக்கு ஆகாது. இப்படியிருக்க மலை மலையாய் ஆட்டுப்பிணம் கோழிப்பிணம் குவிக்கும் கோவிலில் அம்மன் இருப்பாளா? நாம் கொடுக்கும் பலியை ஏற்குமா? இவைகளெல்லாம் பூசாரி சாமிகள் புரட்டு. வயிற்றுப் பிழைப்புக்குச் செய்யும் தந்திரம்.

இனியாகிலும் கொல்லா விரதம் கொள். அம்மனுக்குப் பால் பொங்கலிடு. புஷ்பங்களால் அலங்காரம் செய்து, கண் குளிரக் காண். தேங்காய் பழம் சூடம் இவைகளால் பூஜை செய். கஸ்தூரிகளால் நறுமணம் கமழச் செய். புலால் நாற்றமும், உதிர நாற்றமும், பரிதாப ஓசையும் இன்றோடு ஒழியட்டும்.

ஃ ஃ ஃ

### கர்வத்தின் முடிவு.

மனித உள்ளத்தில் புதைந்து கிடக்கும் உணர்ச்சிகள் விநோதமான போக்கைக் கொள்ளும். உதாரணமாகச் சிலவற்றைக் கூறுகின்றோம். கர்வம் என்ற சிறு உணர்ச்சியை எடுத்துக் கொள்ளுவோம். கர்வம் என்பது துவக்கத்தில் வெறுக்கத்தக்க உணர்ச்சியாக இருக்கின்றது. ஆனால் கர்வம் என்ற உணர்ச்சி செல்லும் பாதையைக் கவனித்தால், அது இன்பம் தருவதாகும். கர்வம், நிகழ்ச்சிகளால் தன்மதிப்பாக மாறுகின்றது. தன்மதிப்பு, பொறுப்புக்கு வான்றோராய் அமைகின்றது. பொறுப்பு வந்ததும், மனிதன் வினையாற்றத் தூண்டப் பெறுகின்றான். கருமத்தில் ஈடுபட்டுவிடும் மனிதனுக்கு அன்பின் தேவை நன்குப் புலப்படுகின்றது. அன்பையும் பொறுப்பையும் தாங்கி நிற்கும் மனிதன் அற்பச் செயலைச் செய்வதற்கு மனங்கூசுகின்றான். அழுக்கைக் கண்டிக்கின்றான். அசுத்தமான காரியத்தை மேற்கொள்ளத் தீமை அஞ்சுகின்றான். கர்வம் என்ற உணர்ச்சியின் போக்கு இதுவேயாகும். தன்மதிப்புடன் அன்பு சேர்ந்து, பொறுப்புடன் அடக்கமும் கூடி, துணிவுடன் நிதானமும் பிணைந்துகொண்டு, அறிவுடன் பக்தியும் கலந்து கொண்டால், அந்த நிலைமை மனிதனுடைய பக்குவ நிலை என்று கூறலாம்.

ஃ ஃ ஃ

### பிராமண சாஸ்திரக் கூற்று.

பிஜி தீவிலிருந்து ஸ்ரீமான் கோவிந்தராஜு பிள்ளை "சுதேச மித்திர"னுக்கனுப்பிய கடிதமொன்றில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:—

ஒரு பிரபு சாகுந்தருவாயில் தனது சொத்தை எந்த விதமாகத் தர்மம் செய்ய வேண்டுமென்று நினைத்தால் நமது குடியைக் கெடுத்த மதம், சாஸ்திரங்களின்படி ஒரு சத்திரம் கட்டி தினம் 100 பிராமணர்களுக்கு சோறு போட்டுக் கொண்டுபோனால் மோட்சம் என்று சாஸ்திரம் சொல்லுகிறது. அது என்ன அநியாயம்! ஒரு பள்ளிக்கூடம் கட்டி ஜாதி வித்தியாசம் பாராமல் தினம் 100 பிள்ளைகளுக்கு படிப்புச் சொல்லிக் கொடுக்கலாமென்றாலோ 'சூத்திரப் பிள்ளைகளுக்கு படிப்புக் கற்றுக் கொடுத்தால் தர்மம் செய்தவர் மகாபாவத்துக்குப் போவார்" என்று நமது சாஸ்திரம் சொல்லுகிறது. இது சுயநலம் கருதியவர்களால் எழுதப்பட்டதா இல்லையா? இப்பேர்ப்பட்ட விஷயங்களைத் தாங்கள் எடுத்துக்காட்டுகிறதே கிடையாது. இப்போது நமது ஊரில் எவ்வளவோ தர்மச் சொத்துக்கள் பாழாய்க் கிடக்கின்றன. இவைகளை சர்க்கார் அல்லது சமூக சீர்திருத்தக்காரர் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டு எல்லா தர்ம ஸ்தாபனங்களையும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களாக கல்வி, கைத்தொழில் இவைகளை ஆரம்பித்து வந்தால் தேசம் க்ஷேமமடையும். இப்போது தர்மச்சொத்துக்கள் எப்படி இருக்கிறது என்றால், மடாதிபதிகளும், மந்துகளும், குருக்கள்மார்களும் ராஜபோகத்தில் அனுபவித்துக் கொள்ள உபயோகப்படுகின்றன. இதைக் கேட்பார் கிடையாது. தேசம் எப்படியானாலும் அவர்களுக்கென்ன; பல்லக்கின் பேரில் சவாரி செய்தால் அதுவே அவர்களுக்குப் போதும்.

ஃ ஃ ஃ

### குரங்குப் பிடி.

ஸர். சங்கரன் நாயர் அவர்கள் மத்திய மாகாண இந்துமகாசபையில் அக்கிராசனம் வகித்துக் கூறியவற்றின் ஒரு பாகமாவது:—

இப்பொழுதுள்ள சாதித் தடைகள் தற்காலத்திற்கு உகந்ததில்லை. நமது உயரிய சாதியினரில் எவரும் தங்களின் கடன்களை முறையாய்ச் செய்கின்றனரில்லை, அவர்கள் மற்றைய சாதியினரின் கடன்களைச் செய்கின்றனர். அந்த முறையான கடன்களைச் செய்யாது தனிச்சௌரவம் கேட்பதில் அர்த்தமில்லை. பொதுவாக பார்ப்பனர்களைக் கேட்கும் உரிமையை அங்கீகரிக்க விழைபவில்லை. அதை அவர்கள் குரங்குப்பிடியாய் வைத்துக் கொண்டிருக்கும் வரை ஒற்றுமைக் குலைவே யிருக்கும். தாழ்த்தப்பட்டார் தங்களின் நிலைமையை தாழ்த்திக் கொள்ளவும், அவமானமான நிலைமையில் வைத்துக் கொள்ளவும் கூடாதென உறுதி கொண்டிருக்கின்றனர். நம்மையும்விட சாதிக் கட்டுப்பாட்டில் வைராக்கியமுடையவர்களான தாங்கள் முகமதியர்களே தங்களின் முன்னேற்றத்திற்குத் தடையாயிருக்கும் மதக் கொள்கைகளை உதறித்தள்ளிவிட்டனர். மதம் நமது ஒழுக்கத்தை ஒழுங்கு படுத்தவே ஏற்பட்டுள்ளது. அது நமது ஒழுக்க முன்னேற்றத்திற்குத் தடையாயிருப்பின், அந்தத் தடைகள் அக்காலத்தில் அப்பொழுதிருந்த நிலைமைக்கே செய்யப்பட்டுள்ளதென்பதாகவே நீங்கள் நிச்சயமாய்க் கொள்ள வேண்டும்.

மற்றும் அந்த ஜாதித் தடைகளை மீறுகின்ற ஒருவனையோ அல்லது குடும்பத்தையோ அல்லது கூட்டத்தினரையோ விலக்கி வைக்கப்படுகின்றது. உதாரணமாக ஒரு தாழ்ந்த வகுப்பார் உபயோகிக்கும் கிணற்றில் தண்ணீர் குடித்தால், அவ்விதம் குடித்தவர்களை விலக்கப்படுகின்றது. ஆனால் அவர்கள் இந்து மதத்தை விட்டுவிட்டவர்கள் அல்லர். அவ்விதமானவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதே எனது கருத்து. பிறமதத்திற்குச் சென்றும் இன்னும் இந்து மதத்தில் நம்பிக்கை கொண்டு இந்து மதத்திற்கு வரத் தயாராயிருப்பவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

## உள்ளதைக் கொண்டு நல்லதைப் பாடு.

'உள்ளதைக் கொண்டு நல்லதைப் பாடு' என்பது உலகில் வழங்கப்படும் ஓர் பழமொழி. இதன் பாகுபாடு முக்கியமாய் செல்வத்தையே பொறுத்திருக்கின்றது. ஒருவன் தன் ஸ்திதிக்குத் தகுந்தவாறின்றி வீண் ஆடம்பரம் பண்ணுவானேயாயின் பின் மானமும் மதியுங்கெட்டு மதிப்புங்கெட்டு நல்லோர்க்கும் பொல்லானாகி உலகில் கள்ளனுவான்.

'ஆன முதலில் அதிகஞ்செலவானால்
மானமழிந்து மதிகெட்டு-போன திசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்புந் [தீயனாய்
நல்லார்க்கும் பொல்லானாய் நாடு'

என்னும் ஔவையாரின் வாக்கு இதனை வலியுறுத்துகின்றது.

'உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
எண்பது கோடி நினைந்தெண்ண—கண் [பதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம் [போல்ச்
சாந்தனையுஞ் சஞ்சலந் தரும்'

என்பது வியாசத்தின் கருத்து. நாள் முழுவதும் நாம் உண்ணுவது நாழியரிசி தான். உடுத்துவது நான்கு முழத் துண்டு. ஆக நமக்கு தினமும் வேண்டியன இவ்விரண்டுமட்டுமே யிருக்க எண்பது கோடி நினைவுகளை நினைந்து மனம் புண்ணாகி அழகான மண் கலமானது கைநழுவி விழுந்தால் உடைந்து நொறுங்கும் உதவாது போகிறதுபோல கடைசியாக உரிய நான்கு முழத் துணியையும் நாழியரிசியையும் முதலாய்க் கவனியாமல் கடைசியில் ஒன்றுமின்மையால் நாம் ஏன் பிறந்தோம்; ஏன் வளர்ந்தோம் எனத் தன்னை ஈன்ற தாயையும் கடவுளையும் நிந்தித்துக் கொண்டு பூமிக்கு இரையாகிறான். ஆனால் மனிதவாழ்க்கையின் பேதத்தையறிந்த மேதாவிகள் இவ்வித அட்டகாசஞ் செய்யாது தன் ஸ்திதிக்குத் தகுந்தவாறே எதுசெய்யினும் முயற்சியுடன் செய்து 'பேராசை பிடிப்பவன் புத்திகெட்டவன்' என்ற கொள்கைப்படி நடந்து முடிந்துபோன அதிர்ச்சிகளை நினையாமல் தமது புத்திக்கெட்டியவாறே சிறுகச் சிறுகப் படித்து உயர்ந்து எழும்புவார்கள். மேலும் இவ்வித மேதாவிகள் தம் மக்களுக்குப் போதிய படிப்பு எய்தியவுடனதான் பெரும்பாலும் அந்நிய ஓர் மகானிடம் முதலில் தாழ்ச்சியைப் படிப்பிக்கும்படியாக இலவசத் தொண்டு வேலைக்குப் போடுவார்கள். இதனால் பிள்ளைகள் உலகத்தில் நடக்க வேண்டிய விதங்களையும் பொறாமை, கோபம், லோபம் முதலிய துர்க்குணங்களையும் நீக்கி பொறுமை, சாந்தம், தயை, தாழ்ச்சி, சிக்கன செலவு முதலிய நற்குணங்களைப் பழகுகிறார்கள். சிலர் இவ்விதமில்லாமல் தம் பிள்ளைகளுக்கு இளமையிலேயே அவர்கள் கேட்டவஸ்துக்களையெல்லாம் எடுத்துக்கொடுத்தும் அவர்கள் இஷ்டத்திற்கெல்லாம் கட்டுப்பட்டும் வருவதினால் மேற்கண்ட நற்குணங்கள் ஒன்றுமில்லாமல் போய் எதிரான துர்க்குணங்களெல்லாம் கைக்கொண்டு பின் உலகத்தில் சீவிக்கும் வழிவகைகளையறியாமல் தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும் என்பதுபோல் எனக்கு நிகருள்ளவர் இவ்வூரில் யார்? எனவும் கூறி சண்டப்பிரசண்டங்கள் பண்ணி பின் தன் வீரபிருதல் பிரயோஜனம் இல்லாமல் தனது ஆஸ்தி ஆனவும் எல்லாம் இழந்து நடைப்பிணமாகிறார்கள். இவைகளுக்கு யாவும் பெற்றோரே காரணராகிறார்கள். தான் உள்ளதைக் கொண்டு நல்லதைப்பாடு என்னும் திருமொழியைப் படித்தும் அதையே தன மக்களுக்குப் படிப்பித்திருப்பரேல் இவ்விதம் சம்பவிக்காது.

உள்ளதைக் கொண்டு நல்லதைப் பாடு என்பது ஓர் நல்லபாடம். இப்பாடம் எல்லோருடையவும் மனத்தின்கண் எப்போழ்தும் குடியிருத்தல் வேண்டியது அத்யாவசியம். பள்ளிக்குப்போதல், சாப்பிடப் போதல் குளிக்கப்போதல் வெளியேறுதல் முதலியவெல்லாவிஷயங்களிலும் உள்ளதைக் கொண்டு நல்லதைப்பாடவேண்டும். பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுடன் சரசவிளையாட்டுகளில் உட்கவனத்தைச் செலுத்தாமல் பாடத்திலும் உபாத்தியாயர் நாவிலும் உட்கவனத்தைச்செலுத்தினால் விருத்தியடைவாய். சாப்பாட்டுவேளையில் பக்கத்திலிருப்பவர் எவ்விதம் சாப்பிடுகிறார்; யாருக்கு சதம் அதிகம் குறைவு என்பதைக் கவனியாமல் உன் மட்டில் தப்பாவாகச் சிறுகச் சாப்பிட்டு எழும்பினால் நல்லொழுக்கமுடையனுவாய். குளிக்கும்போது உனக்குத் தகுந்தபடி ஆழமான இடங்களில் இறங்காமல் சுத்தமாய் அசுசி செய்யாமல் குளித்து வருவாயானால் புத்திமானுவாய். சபைகளில் ஒரு கரையில் மௌனமாகவிருந்து வீண் வார்த்தையிடாமல் உனக்கு வார்த்தைகள் வந்தால்மட்டும் சுருக்கமாகவும் தெளிவாகவும் பேசுவாயானால் பெரியோனுவாய். வெளியேறும்போது உன் ஸ்திதிக்குத் தகுந்தவாறு ஆடம்பரமில்லாமல் உடுத்து சுத்தமாய் வருவாயானால் உனக்கு மதிப்புண்டு இக்கடை எங்குஞ் செல்லும்.

கலியாணாலயங்களில் உனக்குள்ள சிறுபான்மைத் தொகையைக் கொண்டு கெம்பீரமாய் முடிப்பாயானால் மேன்மையுண்டு. வெளிமதிப்பை எண்ணி கடன்வாங்கி செலவு செய்வாயாயின் பின்னர் வெகு துன்பம் வந்து சம்பவிக்கும். கடன்வாங்கும் செய்கையானது பெருந்துன்பத்தை உண்டுபண்ணும். ஈசன சகல கேடுகளுக்கும் வழிகாட்டி. கடன்வாங்கக் கூசாதவர் பொய் சொல்லவும் பொய்ப்பத்திரம் பிறப்பிக்கவும் பொய்வழக்குப் பேசவும் நம்பிக்கைத்துரோகம் செய்யவும் கைலஞ்சம் வாங்கவும் கள்ளவழக்குப் பேசவும் களவுசெய்யவும் கொலை செய்யவுமான சகல பாவங்களையும் செய்ய அஞ்சார். அவ்விதம் வாங்குகிற காசை ஒருசாரார் கள்ளுக்கடை சாராயக்கடைகளிலும் வேசி வீடுகளிலும் தானமழித்துவிட்டு தனது மனைவி மக்களை தாய் தந்தையர் வீட்டுக்கு அடித்துத் துரத்திவிட்டு காடுகளில் திரிந்தலைவர்.

கடலில் குளிக்கப்போன ஒருவன் அலைகள் அடிக்கிறதைக் கண்டு அலைகள் நிற்கட்டும் குளிக்கலாம் என நினைப்பானேயன் அலைகள் நின்றபாடுமில்லை அவன் குளித்தபாடுமில்லை. அலைகளும் ஒருபுறம் அடிக்கத்தானும் ஒருபுறம் குளிப்பானேயின் சித்தியடைவான்.

ஒரு சபை கூட்டத்தொடங்கி சிலர் மாத்திரம் வரவில்லை என நினைந்து அவர்களும் வரட்டும் என்றிருந்து வைப்பார்களாயின் புது ஆட்கள் சிலர் வருமுன் பழைய ஆள்களில் சில போகக்கூடும். ஆகலால் உள்ளவரையில் சபையைக் கூட்டினால் பின்னுள்ளோரும் வந்தே சேருவர். சபையும் இனிது முடியும். இவ்விதமே நமது நாடார் மகாஜன சங்கத்தாரும் தாமதித்து வருகிறார்போலும். இப்படியேயான் கடைசிவரை கூட முயற்சியுள்ளவர்களுக்கும் மனம் விட்டுப்போகும். பின் ஒன்றும் கூடாது. ஆகவே, அவர்களையும் உள்ளதைக்கொண்டு நல்லதைப்பாடக் கேட்டுக்கொள்கிறேன்.

கி. மு. ம. மரியத்தோனி நாடார்,
வடக்கன்குளம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

நாடார்குலமித்திரன்
பிரபவ ௵ ஆடி ௴ ௩௰௧ ௨

## கும்பகோணம் மகாநாடு.

### 11

மகாநாடு குறித்த காலத்தில் செவ்வனே நடைபெறுவதற்கு வேண்டிய சகல காரியங்களையும் உபசரணைக் கமிட்டியார் வெகு துரிதமாய்ப் பார்த்துவருகிறார்களென்று தெரிகிறது. கௌரவ அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற உயர் திருவாளர் ஆர். கே. ஷண்முகஞ் செட்டியாரவர்களும் மனமுவந்து ஒப்புக்கொண்டிருப்பதாக அறிந்து மிகவும் சந்தோஷிக்கின்றோம். ராஜீய மேகஞ் சூல் கொண்டும், ஜாதீயப் புயல் மேற்கொண்டும் வரும் இந்த நேரத்தில் கும்பகோணம் நாடார் மகாநாடு வெகு உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும் சிறப்பாக நடக்குமென்று நம்புகின்றோம். தென் ஜில்லாக்களிலிருந்து ஏராளமான பிரதிநிதிகள் புறப்படுவார்களென்று இப்பொழுதே நமக்குச் செய்தி எட்டுகிறது.

மகாநாட்டுப் பந்தலில் சங்கம் ஜெனரல் மீட்டிங் நடைபெறுவது வழக்கமாதலால் கூடிய சீக்கிரம் கௌன்சில் மீட்டிங் கூட்டி விஷயாலோசனை நடக்க வேண்டியது முக்கியம் என்பதை சங்கம் நிர்வாகஸ்தர்களுக்கு ஞாபகப்படுத்துகின்றோம்.

## வெள்ளக் கொடுமை.

பரத கண்டமாகிய நம்மிந்திய தேசம் விரிந்த கடல்களாலும், உயர்ந்த மலைகளாலும், சிறந்த வனங்களாலும், ஜீவ நதிகளாலும் இயற்கையில் வெகு சிறப்பாயமைக்கப்பட்டிருக்கிறதென்றும், மற்றைய நாடுகளில் பூகம்பம், வெள்ளம், வெயில், புயல், பனி முதலியவைகளாலடையும் துன்பம் நமக்குக் கிடையாதென்றும், ஆகையால் நம் பூமியே புண்ணிய பூமியென்றும் போற்றுவதுண்டு. ஏதோ சில வருஷங்களாக இயற்கையின் சக்தி பாரதநாட்டிக்குப் பாதகமாய் பரவிவருகிறது. கன்னியாகுமரியிலிருந்து காசி வரையுமுள்ள நதிகளில் ஒவ்வொரு வருஷத்திலும், ஒவ்வொரிடங்களில் வெள்ளத்தின் கொடுமையால் ஜனங்கள் மிகுந்த கஷ்டமடைந்து வருகின்றார்கள்.

சமீபத்தில் கூர்ஜர நாட்டில் தோன்றிய வெள்ளக் கொடுமைதான் பெருங் கொடுமையாய்த் தெரிகிறது. அநேக கிராமங்கள் அழிந்தனவாம். பரோடா தேசத்தின் பலபாகம் பழாயினவாம்; ஆடு, மாடுகளும், மனிதர்களும் செத்து மிதக்கின்றார்களாம்; கோடிக் கணக்காகப் பொருள்கள் நஷ்டமாம்; நிலவளங்கள் தலைகீழாக மாறிவிட்டனவாம்; இயற்கை அன்னைக்கு என்னே கோபம்!

முல்லையைக் குறிஞ்சியாக்கி மருதத்
[தை முல்லை யாக்கிப்
புல்லிய நெய்த நன்னைப் பொரு
[வருமருதமாக்கி
எல்லையிற் பொருள்களெல்லாமிடை
[தடுமாறு நீரால்
செல்லுறு கதியாற் செல்லும் வினை
[யெனச் சென்ற தன்றே

என்று கம்பன் வெள்ளத்தின் வேகத்தை வியந்து பாடியதற்கேற்ப கூர்ஜர நாட்டின் நதிகளின் வேகம் அந்நாட்டை நிலை குலையச் செய்துவிட்டது.

இக்கொடுமைக்குட்பட்ட ஜனங்களுக்கு உதவி செய்ய வேண்டியது எல்லாருடைய முதற் கடமையென்பதைக் கண்டு கவர்னர், கவர்னர் ஜெனரல், இராஜாக்கள், ஜமீன்தார்கள், பிரபுக்கள் முதல் யாவரும் உதவி செய்து வருகிறார்கள். பம்பாயிலிருந்து தொண்டர்கள் சென்று மிகுந்த உதவி புரிந்து வருகிறார்கள். தலைவர்கள் நாடெங்கும், ஊரெங்கும் உதவி வேண்டுகின்றார்கள். இந்தியச் சட்ட சபைத் தலைவர் ஸ்ரீமான் படேல் இங்கிலாந்திலிருந்து வந்திறங்கியதும் இச்செய்தியைக் கேட்டுக் கண்ணீர் விட்டு, நாவரண்டு பேச முடியாமற் திகைத்துப்போனார். மகாத்மா காந்தி மனமுருகிப் பொதுவாக உதவி கோரி ஒரு அறிக்கை வெளியிட்டிருப்பதுடன் தமிழ் நாட்டைத் தனிபாகவும் கேட்கின்றார். பெங்களூரில் கதர்ப் பிச்சை யெடுக்குமிடங்களில் கூர்ஜர நாட்டின் வெள்ளக் கொடுமைக்கும் பிச்சை கேட்கின்றார். பணத்தை ஏன் ஒரு சார்பார் பால் ஆண்டவன் ஒன்று சேர்த்திருக்கிறார்? ஏழைகட்குதவவும், ஆபத்தக்குதவவுமே அங்ஙனம் சேமிக்க விட்டிருக்கிறார். ஆகையால் நீங்கள் தாராளமாய் உதவி செய்யுங்களென்று வற்புறுத்துகின்றார். பத்திரிகைகளெல்லாம் ஒரே தன்மையில் அநுதாபங் காட்டி உதவிக்குதவி செய்கின்றன. தமிழ் நாட்டின் பிரவாகந் தோன்றிய போது வட நாட்டார் மிகுந்த உதவி செய்தார்களாகையால் செய்நன்றி மறவாமல் தமிழ் நாடும் உதவி செய்ய வேண்டுமென்று "தமிழ் நாடு" சாற்றுவது சரியென்று நாமும், நமது ஜனங்களும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

## சீர்திருத்தக் கொடுமை.

நமது நாட்டின் தேசிய முற்போக்கு அரசியலில் சீர்திருத்தங் கிடைக்க வேண்டுமென்று ராஜீயவாதிகள் போட்ட கூக்குரலால் கவர்ன்மெண்டார் பரீட்சார்த்தமாய்ப் பத்து வருஷத்துக்குமட்டும் ஒரு திருத்தம் பண்ணினார்கள். அத்திருத்தம் பொருத்தமில்லையென்பதுதான் இந்திய மக்கள் எல்லாருடைய உள்ளக் கிடக்கையாகும். அச்சீர்திருத்தம் இந்திய மக்களை ராஜீய அபிவிருத்தித் துறைக்கு இழுத்துக் கொண்டு செல்வதான சிறிது நன்மை காணக்கூடியதென்றாலும், இடைவழியில் நடக்கும் கொடுமைகளுக்கு அளவேயில்லை. தேர்தல் என்ற கொடுமை மக்கள் மனத் தேறுதலையெல்லாம் நாசமாக்கி விட்டது. ஒரு சிறு கிராமப் பஞ்சாயத்துச் சபை முதல் பெரிய நகரச் சட்ட சபைவரையும் நடக்கும் எந்தத் தேர்தல்களைப் பார்த்தாலும் சரி அடிதடி, பகை முற்றுதல், கோர்ட்டு வழக்கு, கூடா வொழுக்கம் முதலியவைகள் மிகுந்து மக்கள் மனத் தேறுதலிழந்து தேர்தலிலும் மெலிந்து என்றுந் தேறுதலுக்கு வழியில்லாமலும் போய்விடுகிறார்கள். நாட்டைப் பிடித்த இந்தேர்தல் நோய் நாடார்களையும் விடவில்லை. நகர நாடார்கள் மீதுதான் அதிகம் பரவி வருகிறது. அருப்புக்கோட்டையில் நாடார்களுக்கும், இதரர்களுக்கும் ஒரு போர் தொடங்க நேர்ந்தது. விருதுநகரை ஒரு அசைப்பு அசைத்து விட்டது. சமூக நிர்மாணத் திட்டந் தடைப்பட்டது. அக்காற்று சிவகாசி மார்க்கம் போய் தூத்துக்குடியிலும் தோன்றி மறைந்து இப்போது மதுரையில் நாடார் மகாஜன சங்கம் நிர்வாகிகளுக்குள்ளும் வந்து புகுந்து கொண்டதாகத் தெரியவருகிறது. அதன் முழு விவரங்கள் நமக்குச் சரிவரக் கிடைக்கவில்லை. காரியதரிசிகளிலொருவர் தம் பதவியை ராஜிநாமாச் செய்திருப்பதாக நமக்கெழுதியிருப்பதிலிருந்து ஒருசிறு அபிப்பிராய பேதமாவது ஏற்பட்டிருக்கத்தான் வேண்டும். எது எந்த நிலைமையானாலும் மகாஜன சங்கத்தை வந்து பாதிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது எல்லாருடைய கடமையுமாகும். திரண்டுவகைப்பட்டிருக்கிற சமூக நல் வழியை வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது மதுரை நாடார் குலாபிமானிகளின் முக்கியமான கடமையெனக் கருதுகிறோம். எந்தவிஷயத்திலும் பொறுமையோடிருப்பது அறிவுடைமையாகும். குலாபிமானத்தைக் காப்பாற்றுவதே குல தர்மமுமாகும். கூடிய சீக்கிரம் சமாசமாய்விட்டதென்ற சமாச்சாரம் கிடைத்து விடாதாவென்று எதிர்பார்க்கின்றோம். அவ்வாறே ஆண்டவனைப் போற்றுகின்றோம். கும்பகோணம் மகாநாடு மகாஜன சங்கம் தற்போதைய நிர்வாகிகளின் தலைமேலிருக்கிறதென்பதை ஞாபகப்படுத்துகிறோம். ஊழியப் பிரசார சபை இன்னும் மேலான ஊழியத்தில் இறங்குமென்று நம்புகின்றோம். இகத்தில் புகழ் பெறவும், பரத்தில் மோட்சம் பெறவும் பல வழிகளுண்டு. இவ்விரண்டிலொன்றை எல்லோரும் அடைய வேண்டியதே. அதற்கு நேரான வழி எதுவென்று பார்ப்பதிற்றான் மனிதனுடைய அறிவை நன்கு செலுத்த வேண்டியதிருக்கிறது. நாடார் மகாஜன சங்க மத்தியில் மறைந்து கிடக்கிற மாணிக்கங்கள் மகாஜன சங்கம் நிர்வாகிகளின் கிரீடங்களில் இன்னும் பிரகாசிக்கவில்லை. அவர்கள் அதற்குச் சரியான முயற்சிகள் செய்யவுமில்லை. ஜாதீய இரத்தினங்கள் பதித்த கிரீடங்கள் சூடிய அவர்கள் முகத்தை என்று தரிசிப்போம் என்றிருக்கும் ஜன சமூக ஊழியத்தை ஒருவரும் மறந்துவிடக்கூடாது.

## பழயன கழிதல்.

நமது "நாடார்குல மித்திர" னுக்குஇவ்வாரம்52வது இதழுடன் எட்டாவது ஆண்டு முடிந்துவிட்டது. இதுகாறும் செய்து வந்த வேலைகளை ஆண்டு விரிக்கிற் பெருகும் அது மக்கள் மனமறிந்த விஷயம். ஆகையால் பழயன கழிதல் எனத் தள்ளி புதுமையை எதிர்பார்ப்போமாக.

## நாடார் மஹாஜன வாரம்.

### நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

நாடார் மஹாஜனங்களுக்கோர்
வேண்டுகோள்.

விழிமின்! எழுமின்! அறிமின்! கருதிய கர்மம் கைகூடும்வரை சலியாது உழைமின்! (சுவாமி விவேகானந்தர்)

ஐயன்மீர்!

நமது சங்கத்தின் நோக்கங்களை நம்மவர்கள் பாலும் நம் இளைய சகோதரர்கள் மத்தியிலும், எளிதில் பரப்புவதற்கனுகூலமாகவும், நமது சமூகத்தில் புதிய ஊக்கத்தை உண்டாக்கி சங்கத்தின் பொருளாதார நிலைமையை அபிவிர்த்தி செய்யும் பொருட்டும், "நாடார் மஹாஜன வாரம்" எனும் இப்புனித ஸ்தாபனம் ஏற்படுத்தப்பெற்றிருக்கிறது.

இவ்வைபவம் சிறப்பாய் நடைபெறுவதற்குரிய சகல முயற்சிகளையும் முன்னின்று எடுத்துக்கொள்வது தங்களது முதற்கடமை எனக்கொண்டு, இவ்வாரத்தை சங்கத்திற்கு பிரதிஷ்டை செய்து மேற்கண்ட நற்காரியங்கள் விமரிசையாக நடத்தி உதவும்படி அபிமானிகளை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நாளது பிரபவ ௵ ஆவணி ௴ 1௳ முதல் 7௳ வரை நாம் செய்யவேண்டிய நற்காரியங்களாவன:—

காலையில்:—ஜாதியபஜனையுடன் ஊர்வலம் வருதல்.

பகலில்:—நம் ஜன சமூகத்தாரிடம் சந்தா, நன்கொடை, டிக்கட்டு வரி இவைகள் மூலம் சங்கத்திற்கு பணம் வசூலித்தல்.

இரவில்:—பொதுக் கூட்டங்கள் கூட்டி நமது சங்க நோக்கங்களையும், நம்ஜன சமூக முன்னேற்றத்திற்குரிய வழிகளையும் குறித்து உபந்நியசித்தல்.

அன்றியும் கும்பகோணத்தில் 1927-ம் ௵ அக்டோபர் ௴ 1, 2, 3௳களில் நடைபெறப்போகும் 11-வது மகாநாட்டுக்கு ஏராளமான டெலிகேட்டுகள் விஜயம் செய்து நமது குல முன்னேற்றத்திற்குரிய அரிய பெரிய தீர்மானங்களை ஆலோசனைக்குக் கொண்டுவர வேண்டிய முயற்சிசெய்தல்.

இந்நற்காரியத்தில் நாடார் கனவான்கள் ஒவ்வொருவரும் ஈடுபட்டு நம் சங்க நோக்கத்தை ஜெயத்துடன் நிறைவேற்றிக் கொடுக்கும்படி மீண்டும் வேண்டிக் கொள்கிறோம்.

பா. ம. பாண்டியநாடார்,
ஆ. அ. ஆறுமுகநாடார்,
காரியதரிசிகள்.

## லாட்டரி அறிக்கை.

நமது நாடார்குல மித்திரன் க்ஷேம நிதித் தர்மப்பண்டு லாட்டரியில் பிரைஸ் கிடைத்தவர்களில் மணியார்டர் மூலம் பணமனுப்பமுடியாத அந்நிய நாட்டிலுள்ளவர்களுக்குத் தவிர மற்றவர்களுக் கெல்லாம் பணம் அனுப்பிவிட்டோம். விலாசம் சரியில்லாத——ஆ ஜரில்லாதவர்களுடைய சில மணியார்டர்கள் திரும்பியும் வந்து சரியான விபரம் தெரிந்து மறுபடியும் அனுப்பிவருகிறோம். சிலோன் மணியார்டர்கள் மண்டபத்தில் வந்து வேறு பாரத்தில் எழுதி வருவதால் திரும்பியவைகள் யாருக்கு அனுப்பிய மணியார்டர் என்று அறியமுடியவில்லை. ஆகையால் இன்னும் வருவதெல்லாம் வந்த பின் அதைப்பற்றி கவனிக்கப்படும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## ஆடிக் கொடுமை.

நம் நாடெங்கும் ஆடி மாதத்தைத் தலை, இடை, கடையென மூன்று பாகங்களாகப் பிரித்து மூன்று தினங்களிலும் ஒவ்வொரு குடும்பத்திலும் பந்துமித்திர ஜனங்களுடன் அறுசுவையோடு பதார்த்தங்கள் சமைத்து பூஜை முதலியவைகள் செய்து சாப்பிட்டுச் சந்தோஷமடையும் வழக்கம் நெடு நாள் வழக்கமாயிருந்து வருகிறது. இப்பூஜை குல தேவதைக்கா, வன தேவதைக்கா, அல்ல வேறெந்தத் தேவதைக் கென்பது விளங்கவில்லை. பொதுவாகப் பார்த்தால் அது வயிற்றுத் தேவதைக்கென்றுதான் சொல்ல வேண்டும். பிதுர் தேவதைகளை நினைத்துச் செய்யும் பெரிய பூஜையென்றே வைத்துக் கொண்டால் அபிப்பிராயமாய் ஆடு, கோழிகளை அறுத்துச் சமைக்க வேண்டிய அவசியமில்லை.

எண்ணரிய ஜீவ கோடிகளில் ஏற்றமுள்ள மனிதராய்ப் பிறந்து வாழ்க்கை நலத்துக்கேற்ப ஆடியோடிக் கோடித் திரவியம் தேடி நீடிய ஆயுளோடிருக்க நாடிச் செய்யும் ஆடிப் பூஜையில் வாயில்லாப் பிராணிகளாகிய ஆடு, கோழிகளைப் பலியிடுங்கொடுமையேகொடுமையிலுங் கொடுமை. அந்தோ! நமதழகிய இல்லங்களில் நமதருஞ் சிறு மதலைகளுடன் மதலைகளாய்த் தம் குஞ்சுகளுடன் கொக்கரித்து விளையாடும் கோழிகளை நெஞ்சம் கலங்காமல் அம் சிறகையொடித்து கழுத்தைப் பிடித்து சேற்றில் நடும் நாற்றைத் திருகுவதுபோல் துள்ளத் துடிக்கக் கொன்று தின்பதினால் யாது பயன்? இகலோக வாழ்க்கையிற்றேக சுகமோடிருக்கவோ, பரலோக வாழ்க்கையில் முத்தி மோட்சமடையவோ முடியாதென்று பண்டிதரும், பாமரருங்கூடப் பகர்கின்றனர். மனிதர்கள் ஆண்டவனுடைய கட்டளைக்கு விரோதமாக ஈவிரக்கமின்றி வாயில்லாப் பிராணிகளை வதைத்துக் கொல்வதினாலேயே மனிதர்கள் சமாதானமாக வாழ முடியாமல் பரிதபிக்க நேரிடுகிறதென்று சில அனுபோக சாலிகள் கூறுகின்றார்கள். எவன் எதைச் செய்கின்றானோ அவன் அதையே அனுபவிப்பானென்று சாஸ்திரம் சொல்கிறது. அதற்கு அநேக பிரமாணங்களுமுண்டு. மேலும் இகபர வாழ்க்கைக்குக் கொலையும், புலாலுணவும் கொடிய விரோதிகளென்று மேனாட்டார்கள் கூட தகுந்தபடி ஆராய்ச்சி செய்து அவர்கள் நாட்டில் ஜீவகாருண்யப் பிரசாரம் நடத்தி வருகின்றார்கள். மனிதர்கள் புலாலுண்பதால் வியாதிகள் அதிகமுண்டாகின்றனவென்றும், நோய்கள் மிருகமாமிசங்களிலிருந்துண்டாகின்றனவென்றும், ஜெர்மன் பர்லின் நகரிலுள்ள மாடடிக்கும் சாலையில் பரிசோதனை செய்ததில் ஒரு வருஷத்தில் 4300 மாடுகளிலும், 6393 பன்றிகளிலும் க்ஷயரோகம், பிளவை, நீர்ரோகம் முதலிய நோய்கள் பரவியிருந்தனவென்றுங்கண்டு பிடித்திருக்கிறார்கள். சமீபத்தில் சென்னையில் காலராக்காண்பதற்குக் காரணம் ஒருவகை மீனுணவாலென்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

திரு. சத்தியமூர்த்தி வார்டில் மாமிச பத்தியமுள்ளவர்களதிகமாகையால் அந்நோய் ஆங்குலாவவில்லை யென்று தோணுகிறது. ஆகையால் மனித வாழ்க்கைக்குச் சாதகமான உணவு—காய், கனி, கிழங்கு, தானியம் முதலியவைகளென்று நன்கு விளங்குகிறது.

அவர்கள் நீண்டாயுளோடும் ஜீவிக்கலாம். ஆண்டவன் நம் மக்களனைவருக்கும் அறக் கருணை யுண்டாகும் ஆற்றலைத் தந்தருளிப்பாராக. ஜீவகாருண்யச் செல்வர்கள் தங்கள் பிரசாரங்களை இன்னும் தீவிரமாகச் செய்வார்களாக.

## எலெக்ஷன்.

### மதுரை முனிசிபல் 14-வது வார்டு.

நாடார் குல வாக்காளர்களே!

நமது ஜாதியின் முன்னேற்றத்தை முதன்மையாகக் கொண்டு, அறிவிலும், ஆற்றலிலும், அனுபவத்திலும் சிறந்த நம் மாபெரும் பெரியோர்களால் ஸ்தாபிக்கப்பெற்ற, நாடார் மகாஜன சங்கத்தின் கட்டளையைச் சிரமேற்கொண்டு பொது ஜன ஊழியமே பெரிதெனக்கருதி, மதுரை முனிசிபல் 14-வது வார்டு கௌன்சில் ஸ்தானமொன்றிற்கு அபேக்ஷகராய் நிற்கும். ஸ்ரீ ப. வ. சோமசுந்தர நாடார் அவர்களுக்கு தங்கள் வாக்கு (ஓட்)களை கொடுப்பதோடு, தங்கள் நண்பர்களின் வாக்குகளையும் கொடுக்கும்படி செய்து நமது ஜாதியின் கௌரவத்தையும், நாடார் மகாஜன சங்கத்தின் பெருமையையும் காப்பாற்றுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

தங்கள் கீழ்ப்படிதலுள்ள,

நாடார் ஊழியப் பிரசுர சபையார்,

மதுரை.

## திருவிழாக் கொண்டாட்டம்.

கள்ளிக்குளம் பால்யநாடார் சங்கம் சார்பாக அர்ச்சயசிஷ்ட அதிசயப்பனி மாதாவின் திருவிழாக்கொண்டாட்டம் 4-8-27 மாலை 9-30 மணிக்கு இலைகளாலும் புஷ்பங்களாலும் வெகு நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்த உணுப்பெட்டி 5-ம் நிர் கட்டடத்தில் ஸ்ரீமான் வி. இ. மரியமிக்கேல் நாடாரவர்களின் தலைமையின்கீழ் முன்னைய வருடங்களைவிட வெகு சிறப்பாய் நடந்தேறியது. சுமார் 400 கனவான்கள் வந்து விஜயம் செய்திருந்தனர். கடவுள் வணக்கத்திற்குப் பின் தலைவர்கள் முகவுரையாக நாமிவண் விஜயம் செய்திருக்கும் நோக்கமென்ன? என்பதுபற்றியும் ஸ்ரீமான் கா. ஏ. தேவசகாயநாடாரவர்கள் அர்ச்சயசிஷ்ட அதிசயப்பனி மாதாவின் பூர்வசரித்திரத்தையும் ஸ்ரீமான் வி. ச. அந்தோணிசவரிமுத்து நாடாரவர்கள் அர்ச்சயசிஷ்ட எரோணி முஸென் பவருடைய சரித்திரத்தையும் வெகு விரிவாய் அங்குற்றிருந்தவர்களுடைய மனதிலும் பதியுமாறு பேசினார்கள். தேவ ஸ்தோத்திரக் கீர்த்தனைகள் பாடப்பட்டபின் பிராமணரல்லாதார் யாபேரும் யாதோர்வித்தியாசமுமின்றி சிற்றுண்டி யருந்தி அக்கிராசனாரவர்கள் முடிவுரை கூறியதும் அக்கிராசனாரவர்களுக்கும் முகம்தந்த கிராவிடமக்களனைவருக்கும் வந்தனவுபசாரங்கூறி சந்தோஷத்துடன் $1\frac{1}{2}$ மணிக்கு கூட்டமினிது கலைந்தது என்று கௌரவ பொக்கிஷதார் ஸ்ரீமான் வி. மி. எசுவடிய நாடார் எழுதுகிறார்.

## ஸ்ரீ பத்திரவீர மாகாளியம்மன் கும்பாபிஷேகம்.

ஸ்ரீ புரமென்னும் திருவாரூருக்கடுத்த திருப்பணிக்கு கருணைகாத்தொண்டனுக்கு ஸ்ரீ தியாகேசர் கிடாரங் கண்டெடுக்க அனுக்கிரகித்த காரணம்பற்றி கிடாரங்கண்டான் என்ற காரணப் பெயர்பூண்ட புண்ணிய பூமியில் கருதும் அன்பர் மிடி தீரப் பருகவந்த வேண்டு தொண்டாகக் கிருபாநிதியாய் விளங்கும் ஸ்ரீபத்திரவீர மாகாளியம்மன் ஆலயம் கிலமாயிருந்ததை ஸ்ரீலஸ்ரீ சுவாமி கோவிந்தசாமிநாடார் ச. கோவிந்தராஜு நாடாரவர்களின் பக்தி மேலீட்டினாலும் அரும்பெரும் முயற்சியினாலும் யருலாளிகளான ஸ்ரீமான்கள் கிடாரங்கண்டான் சபாபதி நாடாரவர்கள் நாகை. பொ. சொக்கலிங்க நாடாரவர்கள், காயாரோகண நாடாரவர்கள் பொ. வேலாயுதநாடாரவர்கள் நாகூர் பொ. தெண்டாயுதபாணி நாடாரவர்கள் காரைக்கால் பொ. மீனாட்சிசுந்தரநாடாரவர்கள். திருவாரூர் கு. க. மாணிக்கநாடாரவர்கள் முதலான குலாபிமானிகளாலும் ஸ்ரீ அம்பாளுடைய அருளைப்பெற்றவர்களாலும் பெற விரும்புகிற பொதுஜனங்கள் அனைவோர்களாலும் பொருளுதவி செய்யப்பெற்று சுமார் ரூ 4000-க்கு மேல் செலவிடப் பெற்று திருப்பணி வேலை நடந்தேறியது. அதற்கு 8-9-27ல் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற விருப்பதால் பக்தகோடிகள் அனைவரும் வந்திருந்து அருள்பெற்றுய்ய வேண்டுகிறேன்.

வே. சாமிநாதநாடார்.

திருவாரூர்.

## மதுரை முனிஸிபல் 14-வது வார்டு

# எலெக்ஷன்.

குலாபிமானத்திலும், தேசாபிமானத்திலும் சிறந்தவரும், மதுரை நாடார் ஊழியப் பிரசுரசபை பிரஸிடெண்டுமான ஸ்ரீமான் ப. வ. சோமசுந்தர நாடாரவர்களையே ஷை தொகுதியில் தேர்ந்தெடுக்கும்படி எல்லா ஓட்டர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

ஓர் நிருபர்.

## நாடார் மஹாஜனங்களுக்கு

எனது சொந்த முயற்சியை முன்னிட்டு நான் அடிக்கடி வெளியூர்களுக்குப்போய் வரவேண்டியிருப்பதால் எனது நாடார் மகாஜனசங்கம் காரியதரிசி பதவியை ராஜினாமாச் செய்துவிட்டேன். சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுது என்னாலியன்ற பொதுஜன ஊழியம் புரியவும் தயாராயிருக்கிறேனென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பா. ம. பாண்டிய நாடார்,

மதுரை.

## ஏறல் ஆடி அமாவாசை உற்சவம்.

நாலா பக்கங்களிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். விருதுநகரிலிருந்து திரளான தனவந்தர்களும் விஜயஞ்செய்திருந்தனர். பத்து நாள் திருவிழா வெகு சிறப்பாக நடந்தேறியது. ஒன்பதாந்திருவிழா மண்டபப்படி விருதுநகர் ஸ்ரீமான் கொ. சி. சங்கரலிங்கநாடாரவர்களால் அதி சிறப்பாக வாண வேடிக்கையுடன் நடத்தப்பட்டதோடு கூட, பத்தாந் திருவிழா அமாவாசையன்று பகவான் சப்ரத்தில் ஆரவாரத்துடன் எழுந்தருளி ஏறல்மாநகர் வலம்வர, கம்பம், வாணவேடிக்கை முதலானவை வெகு சிறப்புடன் நடந்தேறின என்று ஸ்ரீமான் கொ. சி. பச்சையநாடார் எழுதுகிறார்.

## கூர்ஜர வெள்ளப் பெருக்கு.

### ஆயிரக் கணக்கான வீடுகளுக்கும், ஜனங்களுக்கும் சேதம்.

### போக்குவரத்துத் தடை.

### லக்ஷக் கணக்கான பொருள் நஷ்டம்.

ஆமதாபாத்திலும், அதைச் சுற்றியுள்ள கூர்ஜர நாட்டிலும் ஒரு வாரமாக கனத்த மழை வருஷித்ததால் வெள்ளப் பெருக்கதிகப்பட்டது. நதிகளும், ஏரிகளும், குளங்களும் நிரம்பி அளவுக்குமேல் ஜலம் ஓட்டமிருந்தது. பி. பி. ஸி. ஐ. ரயில்வேயில் பலத்த சேதம். வக்கானம், நாகபுரி ரயில் போக்குவரத்து தடைப்பட்டது. இவைகள் சீர்திருத்தமாக இடத்தைப் பொருத்து ஒரு மாதம், ஒன்றரை மாதம்வரை செல்லுமாம். ரயில்வேக் கம்பெனிக்குமட்டும் 31 லக்ஷம் நஷ்டமாம். சபர்மதி ஆச்சிரமத்திலும் ஜலப் பிரளயம் ஏற்பட்டு இருக்கிறது. அதன் மாணவர் ஒருவர் காணவில்லை. பரோடா சமஸ்தானத்தின் பெரும் பாகம் வெள்ளக் கஷ்டத்தில் அவஸ்தையுறுகிறது. சில விடங்களில் 100 அங்குலம் வரை மழை பொழிந்திருக்கிறது. 25, 30 மைல் விஸ்தீரணத்துக்குத் தொடர்ச்சியாக சில இடத்தில் எங்கும் நீர்ப்பரப்பாய் இருக்கிறதாம். பல கிராமங்கள் பூராவும் இருந்த விடம் தெரியாமலும் கால் வாசி, அரை வாசி, முக்கால் வாசி வீடுகள் மூழ்கிப் போன கிராமங்களும் எண்ணில. நூற்றுக் கணக்கான பிரேதங்கள் ஜலத்தில் மிதக்கின்றனவாம். துர் நாற்றம் அதிகரித்து வியாதிகள் பரவலாமோவென அதிகாரிகள் பீதியுறுகின்றனர். ஆமதாபாத் ஆலைகளின் கட்டடங்கள் சில ஆட்டங்கொடுப்பதால் வேலை நடக்கப்படாதென அதிகாரிகள் உத்தரவிட்டிருக்கிறார்கள். வெள்ளக் கஷ்டத்தால் ஆகாரமின்றியும், தங்க வீடின்றியும் பரிதபிக்கும் ஜனங்களின் இரங்கத்தகுரிய காக்ஷியானது நாட்டை வறுமை பிடித்தாட்டுமோ வென நினைக்க ஏதுவாகிறது. நிவாரண வேலைகளும் நடந்து வருகின்றன.

## க்ஷத்திரியா கமிட்டிஸ்கூல், வெங்காடம்பட்டி.

வெங்காடம்பட்டி க்ஷத்திரியா கமிட்டிஸ்கூல் ஒன்பதாவது ஆண்டு நிறைவிழாவும் பிள்ளைகளுக்கு விளையாட்டிற்கு சன்மானம் அளித்தலும் 1-3-27 காலை 10-30மணிக்கு ஆரம்பித்தது. கல்லாறு எஸ்டேட்டும் மிஸ்டர் எஸ். ஜே. தாம்ஸன் துரையவர்களும் எஸ். ஜே. தாம்ஸன் துரைச்சானியவர்களும் அழைத்துவரப்பட்டும் அக்கிராசனம் வகித்தனர். மாணவர் சம்பாஷணைகளும் பெண்கள் கோலாட்டும் மானேஜர் ரிப்போர்ட்டு ஹெட்மாஸ்டர் மிஸ்டர் கே. பொன்னுசாமி நாடாரவர்கள் அறிக்கைப் பத்திரம் வாசித்தலும் நடைபெற்றன. எஸ். ஜே. தாம்ஸன் துரைச்சானியாரால் பிள்ளைகளுக்கு சன்மானம் அளிக்கப்பட்டது. பின்னர் அக்கிராசனாதிபதியாகிய மிஸ்டர் எஸ். ஜே. தாம்ஸன் துரையவர்கள் அபிப்பிராயத்தை வெளியிட்ட பின்னர் ராஜவாழ்த்துடன் நிறைவிழா சுமார் மூன்று மணிக்கு சந்தோஷத்துடன் முடிந்தது என்று மானேஜர் ஸ்ரீமான் க. அனந்தகிருஷ்ணப் பெருமாள் நாடார் எழுதுகிறார்.

காலத்திற் செய்யுமுதவி
சிறிதெனினும்,
ஞாலத்தில் மாணப்பெரிது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## திக்கு விஷயம்.

இரக்கூனைச் சேர்ந்த பாக்கூசில் ஒரு பசு ஆறு கால்களையுடைய அதிசயமான கன்று ஈன்றிருக்கிறதாம்.

• •

முக்திசிச் கொடியைப் பக்குவம் செய்து அதிலிருந்து ஜெர்மானியர் நூல் நூற்று வருகிறார்களாம். உறுதியான கயிறு உண்டுபண்ண இந்நூல் மிக உபயோகமாக இருக்கிறதாம்.

• •

பீரங்கிகளாலும் உடைக்க முடியாத கண்ணாடியை பிவாடல் பிராவில் ஒருவர் கண்டு பிடித்திருக்கிறாராம்.

• •

உலகில் ஜனங்கள் மூவருக்கொருவர் வீதம் அரிசிச் சாதம் உட்கொள்கின்றனர்.

• •

தூங்கும் மனிதனை யெழுப்ப முகத்தில் தட்டியெழுப்புவதைப் பார்க்கிலும் பெருவிரலைத் தொட்டால் சீக்கிரம் உணர்வு பெற்றெழுந்திருக்கக் கூடுமாம்.

• •

பல்கேரிய அரசர்க்கு பெண் பார்க்க 1913 முதல் முயற்சிக்கப்பட்டு காளது பரியந்தமும் பார்த்து முடியவில்லையாம். இடையில் பார்த்த ஒவ்வொரு தேசராஜகுமாரிகளும் மறுத்துவிட்டனராம். தற்போதும் இதே காரியமாக இங்கிலாண்டு செல்கிறாராம்.

• •

ஒருதாயும் 8 வயது பெண் குழந்தையுமாக கிராமத்திலிருந்தும் சென்னைக்கு பிழைப்புக்காக வந்தார்கள். சென்னையிலுள்ள இரண்டொரு காலிகள் வேலை வாங்கித்தருவதாக ஜாலக்கான வார்த்தைகள் பகர்ந்து அவர்களை தாசிவீட்டுக் கழைத்துச் சென்று அக்குழந்தையை 15 ரூபாய்க்கு ஒரு தாசியிடம் கிரயமாகக் கொடுக்கத்தாயைத் தன் புறத்தில் கைச்சாத்திட்டு கொடுத்தும் அந்த 15 ரூபாயில் ஐந்தை தாயிடம் கொடுத்துவிட்டு ரூபாய் பத்தை தங்கள் தாமாக் கெடுத்துக் கொண்டனராம். என்ன காருண்யம் பாருங்கள்! இத்தியர் பிழைப்பு இக்கதியோ !!

• •

இரங்கூனில் சுததோலிக் கிறிஸ்தவ உபாத்தியாயனொருவன் மிஷன் பள்ளியில் வேலை பார்த்து வந்தான். அவன் அம்மிஷினைச் சேர்ந்த பிஞ்சு பாதிரியாரைக் கொலை செய்துவிட்டதாக விசாரணை நடந்து வருகிறது. குருவை சிஷ்யன் கொல்லும் காலம் போலும்!

• •

காபியிலும் தேயிலையிலும் இருதயத்திற்குத் தீமைகள் விளைவிக்கக்கூடிய கபீன் எனும் விஷம் இருக்கிறதாம்.

• •

'பெகின கெஜெட்' எனும் பிரகாரம் தொடர்ச்சியாக நிற்காமல 1500 ஆண்டுகளாக சீனாவில் பிரசுரமாகி வருகிறதாம்.

• •

பெரியோர்களுக்கு மரியாதைகாட்டும் அறிகுறியாக சீனாவில் சிலர் தங்கள் மூக்குக் கண்ணாடிகளை எடுத்து விடும் வழக்கத்திலிருக்கிறார்களாம்.

• •

கொசுக்கள் எப்போதும் தண்ணீரின் மேல் தான் முட்டையிடும்.

• •

செகந்திராபாத்தில் ஒரு பெண் நான்கு குழந்தைகளைப் பெற்றனள். அவைகள் அனைத்தும் உயிர் துறந்தனவாம்.

• •

விருதுநகரில் சித்தவைத்தியசாலையொன்றேற்படுத்த நகரசபையில் ரூ 1000 அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

• •

பிழிவிதாலாவிலுள்ள ஆலயத்தை மராமத்திலாகா அதிகாரிகள் அப்புறப்படுத்தியதைக் கண்டிக்கும் பொருட்டாக ஒரு பொதுஜனக் கூட்டம் கல்கத்தாவில் கூடியது. அதில் இச்செய்கையைக் கண்டித்தும் விக்கிரகத்தை மறுபடி பிரதிஷ்டை செய்ய வேணுமாறும் தீர்மானிக்கப்பெற்றது. ஆனால் பேங்கலைத் தங்கிய கவர்னரவர்கள் இது விஷயமாய் தாம் கோரில்

விசாரணை செல்வதாகவும் அதுவரை பிரதிஷ்டையை நிறுத்திவைக்குமாறும் கட்டளை கொடுத்திருக்கிறாராம்.

• •

சென்னையில் கூடியிருக்கும் 42-வது காங்கிரஸ் மகாசபைக்கு ஸ்ரீமான் வி. என். முத்துரங்கமுதலியாரவர்கள் உபசரணைக் கமிட்டி அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

• •

ஜெனிவா செல்லும் ஸர். இராமசாமி ஐயர் அவர்கள் தனது குமாரனைத் தனக்கு அந்தரங்க காரியதரிசியாக அழைத்துச் செல்வார்.

• •

ஈரோடு நாயகம் திரு. இராமசாமி நாயக்கரவர்கள் ஆகஸ்டு மாதமத்தியில் சென்னை "திராவிடன்" பத்திரிகையின் ஆசிரியர் பதவி வகிப்பார் என்று தெரிகிறது.

• •

இங்கிலாந்தில் ஊசிபோன்ற கூராயுள்ள மலையொன்றிருக்கிறதாம். இது காற்றுக்கு அசையுமாம். யாரைப் பழி சுமத்தக்கருதியிருக்கும்?

• •

மண்டபம் ஊரில் தங்கும் தொழிலாளர்களுக்கு ஜலவசதியை விஸ்தரிக்கும் பொருட்டு 80000 ரூபாய் இலங்கை அரசாங்கத்தார் கொடுக்கிறார்களாம்.

• •

கொழும்பு நகரத்திற்குள் செல்லும் வாடகை மோட்டார்கள் ஒரு பர் லாங்குக்கொரு தடவை நின்று போக வேண்டுமாம்.

• •

திருச்சி—விழுப்புரம் ரெயில்பாதை முடிந்து விழுப்புரம் விருத்தாசலம் ராஜகண்டசேமுபுரம் வழியாக வண்டிகள் செல்லுமேல மூன்று மணி நேரத்திற்கு முன்னரே திருவனந்தபுரம் போய்ச் சேருமாம்.

• •

இராமநாதபுரம் ஜில்லா போர்டு உபதலைவரவர்களின் பத்தினியாரை அதிகாரிகள் கௌரவ மாஜிஸ்டிரேட்டாக நியமித்திருக்கிறார்கள். இது பற்றி பெஞ்சகோர்ட் தலைவர் தமது பதவியை ராஜினாமா செய்து விட்டனர்.

• •

ஒரு பெண் வாரங்கலில் ஒரே தடவையில் நான்கு குழந்தைகளை ஈன்றனள். அவை ஒன்றன்பின் ஒன்றாக சீக்கிரமாக இறந்து விட்டனவாம்.

• •

இராஜப்பிரதிநிதி லார்டு இர்வின் பெங்களூர் சென்று திரும்புகாலில் உதகமண்டலத்தில் தங்கியிருக்கிறார். இனி கோயமுத்தூர் முதலிய விடங்களுக்கு வருவாரென பரபரப்பு காணப்படுகிறது.

## நாற்றிசை நடப்பு.

### மதமாற்றம்

அம்பாசமுத்திரம் வாசியான ஒரு சைவவேளாள மரபிற்சேர்ந்திய ஒரு வாலிபர் ஸ்ரீலஸ்ரீ ஜனகமாக தொழில் முறைபார்த்து வந்த விருதுநகரில் சென்ற வாரத்தில் முஸல்மானாகமாறி விட்டாராம். சுமார் 30 வயது சென்ற ஒரு நாடாரும் முஸ்லீமாகி முஸ்லீம் பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டனராம்.

### அதிசயப்பிறவியின் அதிசயச்செய்கை.

இங்கிலாந்திலுள்ள மான் செஸ்டர் நகரில் ஒரு அநாதைச் சாலையில் கைகளின்றிப்பிறந்த ஒரு குழந்தையிருக்கின்றதாம். கைகளால் செய்யப்பெற வேண்டிய காரியங்களை கால்களால் நடத்திக்கொள்கிறதாம். ஆகாரத்தையும் கால்களைக்கொண்டே எடுத்துச் சாப்பிடுகிறதாம். மற்றும் வாசிப்புத் தெரிந்த குழந்தையாகலின் தாராளமாய் கால்விரல்களில் பேனாவை மாட்டிக்கொண்டு எழுதுகிறதாம். வயது 12.

### ஊர் நடப்பறிந்த சிறுமி

பஞ்சாப் பிரதேசத்திலுள்ள குருதாஸ் பூரில் ஏழுவயதில் தனது பெற்றோர்களை இழந்த ஒரு பெண் ஆண்வேடம் பூண்டு ஒரு மிராசுதாரிடம் மாடுமேய்த்துவந்தாள். ஆண்களைப் போலவே அவள் கடினத்தும் ஆண்கள் செய்யும் வேலைகளையும் தாராளமாய் செய்து வந்ததால் ஒருவர்க்கும் அறியக்கூடவில்லை. பின் ஒருநாள் தன் முதலாளியுடை மனஸ்தாபத்தால் இருகாலை மாடுகளை பத்திக்கொண்டு வெளியேறிப்போகும் வழியில் போலீஸார் கண்டுபிடித்து அவள் ஆணல்ல பெண்ணென வெளிப்படுத்தினர்.

### ரயில் மோட்டார்.

திருமங்கலத்திற்கும் சோழபுரத்திற்கு மிடையில் போக்குவரத்திற்கு ரயில் மோட்டார் தென்னிந்திய ரயில்வே கம்பெனியார் போட உத்தேசித்துள்ளனராம்.

### சீனாவில் சேதம்.

குழப்பம் மிகுந்திருக்கும் சீனாவில் தற்போது வெள்ளப் பெருக்கேற்பட்டு 7 ஜில்லாக்கள் வரை ஏக நீர்ப்பரப்பாய் போய் விட்டதாம். பதினாயிரக்கணக்கான உயிர்ச்சேதமும் லக்ஷக்கணக்கான பொருள் நஷ்டமும் ஏற்பட்டதோடு வீடின்றியும் தொழிலின்றியும் உணவின்றியும் ஜனங்கள் தவிக்கின்றார்கள்.

### தர்மத்தில் அதர்மம்

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பஞ்சமர்களைச் சேர்த்துக் கொள்ளலாமென்பதுபற்றி முடிவு செய்வதற்காக டிரஸ்டிகள் கூட்டம் 11-7-27-ல் கூடியதில் சேர்க்கக்கூடாதெனத் தீர்மானித்துவிட்டார்களாம். ஆக்ஷேபித்த செல்வர்கள் வருமாறு:- வி. திருமலைப்பிள்ளை, சிவஞான முதலியார், மகாதேசுவரது, எம். சி. டி. முத்தையா செட்டியார். பஞ்சமர் விஷயத்தில் தமக்கனுதாபமிருந்தும் ஓட்டுக் கொடுக்க வியலாது சம்மதம் தாழ்த்தி திரு. வ. ரெங்கசாமி அய்யங்கார வந்தனராம்.

## அசரீரி வாக்கு.

நாடார் குலாபிமானிகளே! ஞாபகம்.

நல்ல சந்தர்ப்பம். ஏமாந்துவிடாதீர்கள்.

1. மதுரை நகரில் இந்தமீ நடைபெறும் 14-வது வார்டு முனிசிபல் எலெக்ஷனில் அபேக்ஷகராக நிற்கும் உங்கள் வகுப்பினருக்கே நீங்கள் மனச்சாக்ஷிக்கு விரோதமின்றி அபிமானத்துடன் உங்கள் (ஓட்) வாக்கைக் கொடுங்கள்.

2. அன்னவருக்கே உங்கள் சிநேகிதர், பந்துக்களுடைய வாக்குகளைக் கொடுக்கும்படி முன்வந்து ஏற்பாடுசெய்து, குலத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுங்கள்.

3. இந்த நல்ல சந்தர்ப்பத்தைத் தவறவிடுவீர்களாயின் வேறு எந்த வார்டிலும், எந்தக்காலத்திலும் சந்தர்ப்பம் கிடைக்கமாட்டாதென்பதை நிச்சயமாய் அறிந்துகொள்ளுங்கள்.

ஒரு கிருபர்.

## பாலுக்குப் பதில் இளநீர்.

புதுச்சேரி, தியாகராஜ வைத்தியர் லக்ஷ்மண சர்மா பி. ஏ. பி. எல் எழுதுகிறார்:—

காந்தியடிகள் சரித்திரத்தில் பாலைப் பற்றி எழுதியிருக்கும் குறிப்புகளை அன்பர் படித்திருக்கலாம். அதில் சொல்லியபடி பாலானது மிகவும் இலேசானதும் எளிதில் புஷ்டி தருவதுமான உணவேயாகும். அதனால் தான் அது யாவராலும் கொண்டாடப்படுகிறது. ஆனால் அதைக் காய்ச்சுவதினால் அதன் உயிராயுள்ள சில ஜீவ உப்புகள் கெட்டுப் போய், அதைய பால் உடலுக்கு நன்மை தராதபடி மாறிவிடுகிறதென்று இக்காலத்தில் ரசாயன முறையில் விளக்கப்பட்டிருக்கிறது. மேலும் விட்டமின் எனப்படும் ஜீவ அணுக்கள் அநேகமாய்ச் சேதப்படுவதும் நிச்சயம். சுறக்குமிடத்திலேயே, குளிர்ந்திருக்கும் பசுவைப் பாலே உயர் வென்பதில் சந்தேகமில்லை. இது புதிய கொள்கையானலும், சீக்கிரம் எல்லா வைத்தியரும் அதை ஒப்புக் கொள்ளுவார்கள்.

பாலுக்குப் பதிலாக உதவக்கூடியது இளநீர். இதை நான் பல நாளாக அடியேன் கண்ட விதிகளின்படி உண்டு குணம் பெற்றிருக்கிறேன். நோயாளருக்கும் இதையே உணவாகக் கொடுத்து, குணமாவதையும் பார்த்திருக்கிறேன். இளநீரானது பாலைக் காட்டிலும் மேலான உணவு. பாலுக்குள்ள குற்றங்கள் ஒன்றும் இதற்கில்லை. பாலுக்கில்லாத குணங்கள் பல இதற்கு உண்டு. மூளை கட்டியைக் கொத்துக் கடலையுடன் பாலுக்கு நிகராகுமென்று சொலவக் கேட்டிருக்கிறேன்; எனக்கு நேரில் தெரியாது.

ஆனால், இளநீர் உயர்வான உணவாகையால், அதற்குச் சில கட்டுப்பாடுகள் உண்டு. 1. அதை மாத்திரம் உணவாகக்கொண்டு மற்ற உணவுகளை அவ்வேளைக்கு மட்டிலாவது விலக்க வேணடும். 2. நீர் இளநீருக்கு மேல் உண்ணவேண்டுமானால் நீரைமட்டில் ஒரு தடவையில் குடித்துவிட்டு, அதன் பின் சுமார் ஒரு யாமம் சென்று, மறுபசி வரும்போது, அதன் இளந்தேங்காயைத் தின்ன வேண்டும். நீரும் தேங்காயும் ஒரே சமயத்தில் வயிற்றில் சேரக்கூடாது; ஆனால் ஒரு இளநீரோடு தின்றால் இரண்டும் சேரலாம்.

(லோ. மி.)

## 60 பவுன் பரிசு.

ஸ்ரீ மஹாத்மாஜீ தமிழ்நாட்டுக்கு விஜயமாகிச் செல்லுமுன் தமிழ்நாட்டின் வகுப்புச்சண்டைகள் நீங்கி, அரசியல் பிரச்னைகளின் அநுகூல அமைப் புத்திட்டம், சமூக ஐக்கியம், மக்வாழ்விலே சமரச உணர்ச்சி இவை நிலவ வேண்டுமெனக் கருதி ஹிந்து தர்மப் பிரசார சங்கத்தார் பெரிதும் உழைக்கின்றனர். இந்த உத்தேசத்தைத் தமிழ் தெரிந்தோரனைவரும் உணர்ந்து சங்கத்தின உத்தேசம் பூர்த்தியாகுமாறு செய்வார்களெனவும் சங்கம் நம்புகின்றது. குறித்த உத்தேசத்தைத் தமிழ் தெரிந்தோர் யாவரும் அறிந்து தங்கள் ஆலோசனைகளைத் தாராளமாகத் தெரிவிக்கலாம். ஒவ்வொரு தமிழ்மாணவரும் மாணவியும் கூடப்படித்துணருமாறு சங்கத்தார் தெரிந்தெடுத்தனுப்புமென்ற 6 தமிழ்ப் புஸ்தகங்களைப் படித்து சுருக்கமாக நல்ல வியாசங்கள் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எழுதியனுப்புவோர்க்கு 60 பவுன் வரை பரிசும் கொடுத்து ஆதரிக்க சங்கத்தார் முன் வந்திருக்கின்றனர். விலாசம்:—

காரியதரிசி,
ஹிந்து தர்மபிரசார சங்கம்,
"ஹிந்துமதபோதினி,"
திருவனந்தபுரம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# நம்பிக்கையின் தூதன்.

ஈசுவர சிருஷ்டியில் எத்தனையோ கோடி ஜென்மங்களில் மானிட ஜென்மம் சிறந்ததான ஜென்மம் என்று சாஸ்திரங்கள் உணர்வதைக் கண்டிருக்கிறோம். இம்மானிட தேகத்தைக் குறித்து "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது" என்று ஔவையும் உணர்த்தக் கேட்டிருக்கிறோம். இம் மானிட ஜென்மம் எடுத்த ரிஷிகளாயினோர் எத்தனையோ பேருளார். "இப்பிறவி தப்பினால் இனி எப்பிறவி வாய்க்குமோ" என்று தாயுமானவரும் கதறியுள்ளார். இப்பிறவியை நாம் அடைந்தது நம் முன் ஜென்ம புண்ணியமே. அதை நாம் அடையும்போதே நம் இருவினைப் பயனும் நம்மையும் சுற்றிக்கொண்டிருக்கின்றன; நம் புண்ணியத்திற் கேற்றவாறு நல்வினையும், பாவத்திற்கேற்ற தீவினையும் நம்மை அடைந்து தொடர்கின்றன. புண்ணியபலன் நம்மை அடையவொட்டாது நம் பாவமானது நம்மைத் தடுக்கின்றது. அதுபோல் "விளையும் பயிர் முளையில்" என்பதிற்கிணங்க நாம் அன்னை வயிற்றிலிருந்து வீழ்ந்தவுடனே நம் பெரியோர்கள் தலையெடுத்து விடுகின்றார்கள். ஈசுவர சிருஷ்டியில் உண்டான இப்பெரிய உலகத்தில் எத்தனையோ கோடி ஜென்மம் எடுத்த நாம் இதை உண்மையாய்ச் சரியான வழியில் நடத்த வேண்டும்; அப்படி நடத்தினால் நன்மையுண்டாகலாம்; நம் பகுத்தறிவைக் கொண்டு இது நன்மை இது தீமை என்று உணரக்கூடிய சக்தியை கடவுள் நமக்குக் கொடுத்தும், இச்ஜென்மம் நித்தியம், சாசுவதம், ஸ்திரம் என்னும் ஓர் மமதையை நாம் அடைந்திருக்கின்றோம். கண்கூடாக உலகில் சினிமா என்னும் பயாஸ்கோப் காட்சிகளையும் நாடகங்களையும் காண்கின்றோம். அது அற்ப சமமே அன்றி வேறல்ல. நாடக மேடையில் நாம் அமர்ந்தவுடனே எவ்வளவோ வேஷங்கள் நமதுகட் புலன்களுக்குத் தோன்றுகின்றன; சினிமாவில் எத்தனையோ படங்கள் சிறு, சிறு வென நம்கண் முன் தோன்றி மறைகின்றன; பார்த்து விட்டெழுந்து பார்த்தவை யெல்லாம், சொப்பனமாகின்றது. நம் நித்திரையில் காணும் சொப்பனம் எப்படி நிஷ்பிரயோஜனமோ அப்படிப் போலவே இது முழிப்பில் காணும் சொப்பனம்; இதுபோலவே ஒவ்வொன்றையும் ஈசுவரன் நமக்குக் காட்டி மறைக்கின்றார். ஏன்? இவ்வளவே உலகம் என்பதை உணர்த்தவே அவர் காட்டி மறைக்கின்றார். அறிவுடையோர் இதை வெகு எளிதில் அறிந்து கொள்வார்கள்; என்போன்ற பாமரர்கள் எப்படி உணர முடியும்? நாம் முன் ஜென்மத்திற் செய்த நல்வினை தீவினைப்படி இச்ஜென்மம் நாம் எடுத்திருக்கின்றோம். ஜென்மம் எடுத்த ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாய் இருக்க நாம் காண்கின்றோம். நாம் என் அந்தமாதிரி இருக்கக்கூடாது என்று நினைப்பது சுத்த மதியீனம். நாம் முன் செய்த தீவினையை உடனே உணர வேண்டியது. அது உணராது, சுகமாய் இருக்கப் பட்டவர்களைப் பார்த்து அசூயையாவது பொறாமையாவது நாம் கொண்டால், தானும் இந்த ஜென்மம் அதிக வினை மூட்டையைத்தான் கட்டிக் கொள்ளுமேயன்றி வேறு ஒரு பயனுமில்லை. இப்பிறவியின் வினைக்குக் காரணம் மனமே; ஆனதால் இந்திரியங்கள் செயலற்றிருக்கும் காலத்திலும் அது ஓய்வில்லாமல் நினைவால் வினைகளைச் செய்து பிறவியைத் தொடுத்துக் கொண்டிருக்கிறது. முத்தியை அடைய விரும்புவோர், பிறவியைத் தொடுக்க ஏதுவாக விருக்கும் வினைகளைச் செய்யவிடாமல் மனதைத் தடுத்துக் கொண்டிருப்பார்கள். மனதை வசப்படுத்துவது கடினமாய் இருப்பதால், தாயுமானவருள்; "பாழான என் மனம் குவிய ஒரு சந்திரம் பண்ணுவதுனக் கருமையோ" என்று ஆசையோடு சொல்லியிருக்கிறார். அப்படிப் பட்ட கொடிய மனதை வினை செய்ய வொட்டாது தடுக்க வேண்டும். இந்த ஜென்மத்தில் தீவினையை நாம் தடுத்தாண்டு வந்தால், வரும் ஜென்மத்திலாவது நன்மையுண்டு. சுந்தர மூர்த்தி நாயனாரும் பூலோகத்தில் பிறக்கும்படி சபித்தபோது, சிவபிரானிடம் இரைந்து வேண்டி நாம் செய்யும் பிழைகளைத் தடுத்தாள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். எம்பிரானும் அதற்கிசைந்தாரல்லவா?

மோக மறுத்திடினு முத்தி கொடுப்பதென வாக்கியங்கள் சொன்னவர் தம்மை தோகையார் பார்பூராகப் போவிடும் வன்றொண்டன் றொண்டு கனை யேதாகச் சொல்வேனியான் என்று ஈசுவரனே தடுத்தாள வேண்டிய நிமித்தம் பரவைத் தூதாகச் சென்றார் அல்லவா?

இச்ஜென்மத்தில் நாம் அடையக் கூடாத அரிய செய்கைகளையும் செய்து விடலாம். அப்படி நம் புத்தியை நாம் சரியான வழியில் முதல் முதல் செலுத்தி நல்ல மார்க்கத்தையே கைக்கொள்ள வேண்டும். அப்படிக் கைக்கொண்டால் நம் ஜென்மம் கடைத்தேறும்; நேராக நடக்கும் படியான இராஜபாட்டையை ஏற்படுத்தியிருக்கும்போது அதைவிட்டு குவியல் குவியலாய்க் கொட்டியிருக்கும் கப்பிமேட்டில் தான் நான் ஏறிப் போவேன் என்றால் யார் என்ன செய்ய முடியும்? இதை யொட்டி மகான் தியாகய்ய ரென்னும் பரம பாகவத சிரோமணியானவர் "செக்கனிராஜ மார்க்கமுயுண்டாக சந்துலே தூரட்டம் யால்" என்று கூறியிருப்பதையுங் காண்க; மானிடப் பிறவிக்குக் கர்ம வினையே காரணமாயிருத்தலால் மானிடப் பிறவியிலே கர்ம வினையானது காருண்ணியத்தமாகவே நம் மெதிர்வந்து லபிக்கின்றது. அங்ஙனம் லபிக்கும்போது அதைச் செய்யவே மனமும் நாடாமல் இருப்பதில்லை. ஜெனமத்தைத் திட்டியும் தூஷித்தும் யாது பயன்? யாவருக்கும் ஒரே ஜென்மம்; ரத்தம், மாம்சம், நரம்பு, எலும்பு, யாவும் ஒன்றே. செய்த வினையின்படி நாம் கூடிக்கிறோம். இதற்கு ஈசுவரன் யாது செய்வார்? ஜென்மம் யாது செய்யும்? இந்த ஜென்மம் அநித்தியம் என்பதை அடியோடு மறந்துபோகின்றோம். எல்லாம் ஏதோ? நாம் அழியாது இருப்பது போலவே, ஒவ்வொன்றையும் நடத்துகின்றோம். அவ்வளவாய் நாம் நடத்தியதன் பலன் என்ன? ஒன்றுமில்லை. இச்ஜென்மத்திற் செய்யும் வினைகள் நம்மைபடராது ஆன்மாவைப்பற்றி வருகின்றது. ஆன்மாவோடு கூடின் சரீரமோ புது வீடு தேடி அதனுட்புகுந்து செய்தவினையை விடாது கொண்டு போகின்றது. சரீரமோ இறுதியில் நிஷ்பிரயோஜனமாகி அக்கினிக்கிரையாகின்றது. இவ்வளவு கேவலமான இந்த நர ஜென்மம் உலகில் எப்படி நடக்கிறது; எப்படிக் குதிகுதித்தோடியிருக்கின்றது. என்னே! எல்லாம் மாயை!! சூரியனைக்கண்டு எப்படி தாமரை மலர்கின்றதோ அப்படியே ஜென்மத்தைக்கண்டு நம் தலை ஆட்டங் கொள்ளுகின்றது. இந்த ஆட்டத்தை நாம் ஆடாதபடி தடுக்க நமக்கு வல்லமையிருந்தும் கூர்மழுங்கிய ஈட்டிபோல் சமயத்தில் கிட்ட வராதபடி நம் கர்ம வினையானது அதை விரட்டி விடுகின்றது. பிரதி ஜென்மத்திலும் நாம் அடைந்ததும் அடையாததும் நம்மைப்பற்றியே வருகின்றன. நாமே ஒவ்வொன்றையும் செய்யும்படியான சக்தியோ வலிமையோ நமக்கில்லை. அது அது ஜென்ம வாசனை. ஓர் நன்மையோ, தீமையோ எண்ணும் போது அதற்கு அனுகூலமாய் அமைந்திருப்பது ஜென்ம விட்டது பாக்கி. இதை யுணராது பிறரை நிந்திக்கவாவது கேவலப்படுத்துவதாவது சுத்த மதியீனம். ஜெனமம் கிடைப்பது அரிது என்பது உணர்ந்தே இந்த ஜென்மத்தைக் கைவிடாது மகாப் பெரியோர்கள் தவமியற்றி முன்னேற்ற மடைகின்றார்கள் எல்லாரும் ஏன் அப்படிச் செய்யக் கூடாது என்றால் ஜென்மம் செய்த கர்மம் அவ்வளவுதான். நாரதர் முன் ஜென்மம் எப்படி இருந்தது? கேவலம் ஒரு வீட்டில் தாயும் மகனுமாய் வேலை செய்து கொண்டிருந்தனர். அந்த வீட்டிற்குப் பக்தகோடிகள் வந்திருந்தார்கள். அவர்களுக்கு இப்பையன் வெகு பயபக்தியோடு ஊழியம் செய்து வரும்போது, இச்சிறுவனது சிரத்தையைக்கண்டு மகான்கள் தம் தேச சஞ்சாரம் செய்யப் புறப்பட்டு கையில் அவனைத் தம்முடன் அழைத்து அவனுக்கு பகவத் தியான வகைகளை உபதேசித்தார்கள். அச்சிறுவன் தன் தாயால் போஷிக்கப்பட்டு வருகையில் ஒரு நாள் அவளைப் பாம்பு கடிக்க, அவள் இறந்தாள். அந்த தக்க சமயத்தில் தச்சிறுவனுக்கு மகான்கள் செய்த மந்திரம் நினைவுக்கு வர அவன் ஒருவாறு தேறி தான் மேன்மை அடைவதற்காக ஹிமாலயம் நோக்கிப் புறப்பட்டான். வழியில் களைப்பு அதிகரிக்கவே அருகில் இருந்த ஓர் ஏரியில் அவன் ஸ்நானம் செய்து அங்கு நீரைக் கொஞ்சம் குடித்துக் களைப்பாறினான். அவன் அந்த ஏரியில் மகான்கள் சொல்லிய உபதேசத்தை தியானம் பண்ணினான். அவன் மனதில் பாவத் ரூபம் தோன்றி மறைந்தது அதை நன்றாகக் காண்பதற்கில்லையே என்னும் ஏக்கம் உண்டாக, அந்த சமயத்தில் ஆகாய வாணி அசரீரியாக நின்று "உனக்கு இந்த ஜென்மத்தில் இவ்வளவுதான் பகவத் தரிசனம் கிடைக்கும்; நீ விடாது பக்தி செய்து கொண்டிரு; இதைவிட மேலான பதவி அடுத்த ஜென்மத்தில் கிடைக்கும்" என்று கூறி அச்சிறுவனைத் தேற்றிற்று. அச்சிறுவன் அங்கிருந்து குதூகலத்தோடு பக்தி செய்து கொண்டு மரண காலம் எப்போது சமீபிக்கும் என்று கருதியவாறு தேச சஞ்சாரம் செய்து கொண்டிருக்கும்போது திடீர் என்று மரண காலம் சமீபித்தது. அவனே அடுத்த ஜென்மத்தில் மகா பக்த சிரோமணியான நாரதராயினன். அவர் பிரம்மாவின் ஸ்வாசத்திலிருந்து வெளிப்பட்டதாகப் புராணங்கள் விளம்புகின்றன.

ஆனதால் ஜென்மம் நாம் அடைவது முழுவதும் ஜென்மாந்தரம் செய்த பயனே என்பதை உணர வேண்டும், ஈசுவரன், நம்மைச் சோதிப்பவர் அல்ல; தண்டிப்பவரும் அல்ல; கேவலம் மனுஷனுக்கு மனுஷனே பரிதாபப் படும்போது, ஈசுவரனுக்கு நம்மிடம் பரிதாபம் இல்லாமலிருக்குமா? நாம் முன் செய்ததை அனுபவிக்க வேண்டியதற்கு அவர் என்ன செய்வார்? அவர் நம்மைக் கண்டு பரிதபித்து செய்யக் கூடியது யாதும் இல்லை. ஜென்மம் கடைத்தேறும் வழியைத் தேட வேண்டுமல்லாது வேறு செய்வது பயனாகாது. ஜென்மம் கடைத்தேற சன்மார்க்க வழியைக் கைப்பற்ற வேண்டும்; பெரியோர்களின் துணையை அனுசரித்து நடக்க வேண்டும். நம்மாலியன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்ய வேண்டும். அவ்வுபகாரமானது பிறர் மெச்சும்படியானதாய் இருப்பது நலமல்ல. ஜென்மசாபல்யமாக வேண்டி நாம் செய்வதனைத்தும் நம் மனதுள்ளே அடங்கியிருக்க வேண்டும். நம்மால் உதவி செய்ய முடியவில்லை. சரீரத்தாலாவது உதவி இயற்றவேண்டும். அவ்விதம் இல்லையாயின், பிறரைக் கொண்டாவது உதவி புரியச் செய்ய வேண்டும்; இதுவுமில்லை யென்றால் ஸர்வ பரிபூரணரான கடவுளிடம் தான் முறையிட வேண்டும்.

"தொழுது கை துன்பம் துடைப்பாய் போற்றி" என்பதுபோல நாம் கடவுளை மனப்பூர்வமாய்த் தொழுதால் முடியாது என்று நம்மைத் தள்ளிவிட முடியாது.

நாம் அப்படி இடைவிடாது பக்தி செய்ய நமக்கு ஜென்ம பலன் வேண்டியது. ஜென்மாந்தரம் நல்ல பண்ணியமியற்றி இருப்பின் யாவும் கைகூடி வரும். இச்ஜென்மம் இனியாவது இந்த இச்ஜென்மத்தோடு முடிவடைந்து ஈசனடியினைச்சார நாம் கடவுளை வேண்ட வேண்டியது; வேண்டின், என்றும் அருள்புரிவார்.

ஆகவே இன்பம் நேர்ந்த காலத்திலும் துன்ப முறுங் காலத்திலும் சந்தோஷிக்கவோ சலிக்கவோ கூடாது. வருவதனைத்தும் எம்மிறைவன் அருளேயென மதித்தல் வேண்டும். இம்மதிப்பினையே உலகத்தவர் நம்பிக்கையெனச் சொல்வர். நன்னம்பிக்கை கொண்ட துணை உண்டாயின், அதையே இறைவன் விட்ட தூதென நம்மவர் கருதிக் கைவிடாது பற்ற வேண்டும். அதுவே பக்தி.

எவ்விதம் கடவுளை வேண்ட வேண்டுமென்னும் வகையறியாது வாடுவோர் பலர்; என்றாலும் பெரியவர்கள் விட்ட வழியையே யாமும் கைப்பற்றக் கடவோமாக. பக்தி பக்தி யென்னும் பாசத்தினால் பரமனது கிருபையைப் பெற்ற சேக்கிழார் சுவாமிகள் உரைப்பதைப் பாருங்கள்.

சொல்லுவதறியேன் வாழி
தோற்றியதோற்றம் போற்றி
வல்லவங் கருளியென்னை வாழித்
தொண்டுகொண்டாய்போற்றி
யெல்லையிலின்பவெள்ளமெனக்
கருள்செய்தாய்போற்றி
தில்லையம்பலத்துளாடுஞ்
சேவடிபோற்றியென்ன.

"இந்து நேசன்"

---

## ஹார்லி மாத்திரைகள்.

இம்மாத்திரைகள் இரத்தத்தை விர்த்திசெய்து கெட்டுப் போன இரத்தத்தை சுத்திசெய்யவும், நீர்ச்சுருக்கு, குலைநோய், நெஞ்சுவலி, காசம், இருமல், குன்மம், சீதபேதி, வாந்திபேதி இன்னும் சகல வியாதிகளையும் நீக்கி பசி தீபனத்தை யுண்டாக்கி ஆயுளை விர்த்தி செய்கிறது.

30 மாத்திரைகள்கொண்ட டப்பி ரூ 1—0—0

விலாசம்;—வி. ஏ. ஞானப்பிரகாசம்,
டாக்டர் ஹார்லி துரை பங்களா, தல்லாகுளம், மதுரை.

எங்கும் கியாதி பெற்ற

## இரணியல் ஜரிகை வஸ்திரங்கள்.

சகல ஜாதியாருக்கும், மொத்தமாக வியாபாரிகளுக்கும் அவரவர் விருப்பத்திற்கிணங்கும்படி புடவை, கவணி, ஸாரி பல மாதிரி புள்ளியிலைகரை கேரியல், ஜரிகைச் சேலை, விளிம்பு ஜரிகை துப்பட்டாக்கள், வேஷ்டிகள், கட்டி திலுசுகள், அநேக விதமான துண்டுகள், பட்டுத் துப்பட்டாக்கள் முதலிய எவ்வித வஸ்திரங்களும் உயர்வான தரமாக ஆர்டர் கிடைத்த 10 தினங்களுக்குள் வி. பி. மூலமாக அனுப்பப்படும். கூடுதல் விபரம் வேண்டியவர்கள் மானேஜர் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

இ. ஏ. நீலகண்ட பிள்ளை,
மானேஜிங் புரோப்ரைட்டர்,
"இரணியல் கிளாத் ஸ்டோர்"
இரணியல், நெய்யூர் போஸ்டு, தென் திருவிதாங்கூர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection